திருச்சிக்கல்

திருக்கோயில் வரலாறு



31174

அருள்மிகு சிங்காரவேலவர்

ஓம்:

திருச்சிக்கல் திருக்கோயில் வரலாறு

***

எழுதியவர்:
செந்தமிழ்ச் செம்மல்
வித்துவான் சொ. கணபதி தேசிகர்,
முதனிலைத் தமிழாசிரியர்,
நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

***

வெளியீடு:
அருள்மிகு நவநீதேச்சுர சுவாமி திருக்கோயில்
சிக்கல் - 611108. தஞ்சை மாவட்டம்,
தொலைபேசி எண்: 350 (நாகப்பட்டினம்)

1988

உரிமை பதிவு] *[விலை ரூ.* **2-00**

முதற்பதிப்பு	1941
இரண்டாம் பதிப்பு	1949
மூன்றாம் பதிப்பு	1952
நான்காம் பதிப்பு	1959
ஐந்தாம் பதிப்பு	1963
ஆறாம் பதிப்பு	1970
ஏழாம் பதிப்பு	1971
எட்டாம் பதிப்பு	1976
ஒன்பதாம் பதிப்பு	1980
பத்தாம் பதிப்பு	1985
பதினோராம் பதிப்பு	1988

அன்பு பிரிண்டிங் பிரஸ், சுவாமிமலை - 612302.

செயல் அலுவலர்கள்

1	திரு	K. S. இராமையா B.A.B.L.	1—11—44	to	22— 9—45
2	,,	J. M. சோமசுந்தரம் B.A.B.L.	22— 9—45	to	23— 9—46
3	,,	R. மோகன்ரெங்கையா B.A.B.L.	23— 9—46	to	17—12—46
4	,,	T. D. மீனாட்சிசுந்தரம் B.A.B.L.	17—12—46	to	2— 7—50
5	,,	N. இராஜகோபால் B.A.B.L.	2— 7—50	to	5—12—52
6	,,	V. சந்திரசேகரன்	5—12—52	to	24— 8—53
7	,,	அ. கோபால்சாமி B.A.	24— 8—53	to	16— 6—55
8	,,	S. இலக்ஷ்மணன் B.A.	16— 6—55	to	23— 6—56
9	,,	M. கோபாலன்	23— 6—56	to	4—11—57
10	,,	N. சிவராமன்	4—11—57	to	19— 7—59
11	,,	K. S. கோவிந்தராசன்	19— 7—59	to	11— 1—61
12	,,	R. கிருஷ்ணசாமி B.A.B.L.	11— 1—61	to	23— 1—62
13	,,	V. O. K. கிருஷ்ணமூர்த்தி B.A.B.L.	23— 1—62	to	31— 5—64
14	,,	P. கந்தசாமி B. Sc.	31— 5—64	to	31— 7—65
15	,,	A. கோபால்சாமி B.A.	31— 7—65	to	17— 6—68
16	,,	த. நாகராசன் B. Sc.	17— 6—68	to	29— 7—70
17	,,	K. S. கோவிந்தராசன்	29— 7—70	to	10— 9—70

18	திரு	T. P. வெங்கடாசலம் B.A.	10— 9—70	to	6— 8—72
19	,,	ஆ. சண்முகசுந்தரம்	6— 8—72	to	28—10—72
20	,,	லெ. சங்கரகுத்தாலம்	28—10—72	to	21—11—75
21	,,	A. சுவாமிநாதன்	21—11—75	to	8—12—75
22	,,	சா. மகாலிங்கம் B. Sc.	8—12—75	to	14— 4—76
23	,,	சி. சிவதாணு B.A.	14— 4—76	to	27—11—76
24	,,	T. N. பரமசிவம் B.A.	27—11—76	to	23— 3—77
25	,,	சி. சிவதாணு B.A.	23— 3—77	to	3—10—77
26	,,	K. N. சொர்ணம்	3—10—77	to	30— 3—79
27	,,	N. தியாகராஜன் B. Com.	30— 3—79	to	29— 9—80
28	,,	N. முருகன்	29— 9—80	to	28— 7—84
29	,,	N. ஸ்ரீ நாராயணன்தம்பி M.A.	28— 7—84	to	22—11—84
30	,,	M. K. சுப்பிரமணியம் B. Com.	22—11—84	to	23— 4—85
31	,,	B. கிருஷ்ணசாமி	24— 4—85	to	29— 1—86
32	,,	S. ஸ்ரீதரன் B.A.	30— 1—86	to	3— 5—86
33	,,	அ. சுவாமிநாதன்	4— 5—86	to	26— 7—86
34	,,	சு. பன்னீர்செல்வம்	1— 8—86	to	9— 9—87
35	,,	கு. கல்யாணம் M.A.	10— 9—87	to	6—11—87
36	,,	P. இராமகிருஷ்ணன் B.A.	7—11—87 முதல்		

பதிப்புரை

"மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே" என்று பாடினார் பாரதி.

"விண் மறைக்கும் கோபுரங்கள், வினை மறைக்கும் கோயில்கள் வேறு எந்த நாட்டில் உண்டு" என்றே பெருமிதத்தோடு கேட்கிறார் இன்னொரு கவிஞர்.

விண் மறைக்கும் கோபுரங்களும் வினை மறைக்கும் கோயில்களும் நிறைந்த நாடல்லவா நம்து நாடு.

கலை, கைத்தொழில், கடவுள் நெறி ஆகிய பல்வேறு துறைகளிலும் தமிழர் தொன்றுதொட்டே மேம்பட்டு வந்திருக்கின்றனர். அவர்களது பரந்துபட்ட பண்பாட்டு நாகரீக மேம்பாடுகள் அனைத்திற்கும் எல்லைக் கல்லாக விளங்குவது தென்னிந்தியக் கோயில்களேயாகும்.

சங்க காலத்திலேயே தமிழ் நாட்டில் கோயில்கள் இருந்தன என்பதைப் புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை போன்ற தொன்மையான இலக்கியங்க்ளால் அறிகின்றோம். சுமார் 2500 ஆண்டுகட்கு முன்னரேயே தமிழகத்தில் சிவபிரான், முருகன், பலராமன், திருமால் ஆகிய தெய்வங்கட்குத் தனித் தனியே கோயில்கள் இருந்தன என்பதை,

> **"பிறவா யாக்கைப் பெருயோன் கோயிலும்**
> **அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
> **வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
> **நீலமேனி நெடியோன் கோயிலும்"**

என்னும் சிலப்பதிகாரத் தொடர்களால் அறியலாம்.

கி. பி. நான்காம் நூற்றாண்டின் முன்பிருந்த சோழ மன்னன் கோச்செங்கணான், சிவபெருமானுக்கு எழுபது கோயில்கள் கட்டிவைத்தான் என்று தெரிகிறது. அத்தகைய கோயில்களில் ஒன்றாக இலங்குவது நமது திருச்சிக்கல் ஆகும்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் சமய வளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியையும் ஒட்டி வளர்ந்தன. இறைமை உணர்வும், கலையுணர்வும் இயைந்ததால் அற்புதமான

தெய்வீகக்கலை வளமாக ஓங்கியது. சமயமும் கலையும் ஒதுங்கியிராமல் கோயில்கள் சமுதாயத்தின் அங்கமாகவே செயல்பட்டதால் அனைத்தும் இணைந்து தமிழகத்தில் பொன்னே போல் திகழ்ந்தன.

கோயில்களே கல்வி நிலையங்களாகவும், சமயப்பிரச்சார நிலையங்களாகவும் நிதி நிலையங்களாகவும் பண்டகசாலை களாகவும் பல்வேறு நிலைகளில் செயல்பட்டுச் சமுதாயத்தில் முதன்மையான இடம் பெற்றுத் திகழ்ந்தன.

கோயில்களில் சிற்பக்கலை மட்டுமின்றிச் சித்திரக்கலை யும் இடம் பெற்றுள்ளது. சிற்பம், சித்திரம், இசை, நாடகம் இலக்கியம் கைத்தொழில் அனைத்துமே கோயில்களை ஒட்டி வளர்ந்தன என்பது ஆன்றோர்கள் கண்ட முடிவாகும்.

கோயில்கள் எல்லா நாட்டிலும், எச்சமயத்தினரிடையும் உண்டு. ஆனால் ஞான நூற்கருத்தோடு ஒத்த சமயக்கோயில் அமைப்பு தென்னாட்டிற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

மனிதனைப் பண்படுத்துவது சமயமேயாதலால் கோயில் களால், பண்பட்ட நமது சமுதாயம் உருவாகி, உலகெங்கிலும் குன்றினிடை இட்ட விளக்கென்ன, பெருஞ்சுடர் விட்டு விளங்கியது. நமது பாரம்பரியத்திற்கும் மேன்மைக்கும் ஈடு இணையற்ற பெருமைக்கும் ஒப்பற்ற நிலைக்களமாக இருக்கும் ஒப்பற்ற குலதனம் நம் திருக்கோயில்களே. அவற்றின் வரலாறு இன்றைய நிலையில், நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து பார்க்கவேண்டியதொன்றாதலின், "திருச்சிக்கல் கோயில் வரலாறு" பதினோராம் பதிப்பாக இதுபோது வெளிவருகிறது.

இத்திருக்கோயில் வரலாற்றினை முன்னாள் செயல் அலுவலர் திரு. த. நாகராசன் அவர்களால் செப்பமுற எழுது வித்து ஆறாம் பதிப்பாக வெளியிட்டார்கள் இதுபோழ்து பதினோராம் பதிப்பாக வெளிவருகிறது.

G. பிரபாகரன்
தக்கார்.

P. இராமகிருஷ்ணன்
செயல் அலுவலர்.

முன்னுரை

சோழ வளநாடு பழம் பெருமையும், தொன்மையும் வாய்ந்தது. பல்லவர் ஆட்சிக்காலத்தில் சோழநாட்டின் சிறந்த துறைமுக நகரமாக நாகப்பட்டினம் விளங்கிற்று. தஞ்சை மாவட்டத்தில் இதுபோதும் சிறப்புற விளங்குகிறது. "வங்கமலி கடல் நாகை" என்று அப்பர் சுவாமிகளால் பாராட்டப் பெற்றது.

செல்வக் கடல் நாகையின் மேல்பால் விளங்கும் தலங்களிற் சிறந்தது திருச்சிக்கல் ஆகும். அருள்மிகு நவநீதேசுவரர் அன்புப் பிழம்பாக இவண் அருங்காட்சி தருகின்றார். இறைவி பெருமை பிறங்கும் நாயகியாக இங்கே வேனெடுங்கண்ணி என்ற திருப்பெயர் தாங்கித் திருக்காட்சி வழங்குகின்றார். ஆறுமுகக் கடவுள் சிங்கார வேலவராக எழுந்தருளியுள்ளார்.

உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத் தருதல் முதலிய ஐந்தொழிலையும் அவ்வுயிர்கள் மேல் வைத்த பெருங்கருணைத் திறத்தினால் புரிந்து உய்யக் கொண்டருளும் பரமபதியாகிய சிவமே முழுமுதற் கடவுள். அவனை வழிபட்டு உய்திகூடற்கு உரிய நெறி முறையே சைவ சமயம்.

உலகில் வழங்கும் பல்வேறு சமயங்களும், இனித் தோன்றும் சமயங்கள் உளவேல் அவையும் தன்னுள் அடங்குமாறு அவற்றுக்கெல்லாம் தலைமைத்தாய் விளங்குவது சுத்தாத்துவிதம் என்னும் சைவ சித்தாந்த சமயம்.

இத்தகைய சிறப்புவாய்ந்த சைவசமயத் தத்துவங்கள் பதி, பசு, பாச இயல்புகள், சரியை முதல் நாற்பாதங்கள் முதலிய எண்ணிறந்த இலக்கணங்களுக் கெல்லாம் இலக்கியமாய் நின்றன நம் தெய்வத் தமிழ் மறைகளாகிய சைவத் திருமறைகளும் புராணங்களும்.

கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது சாலச்சிறந்தது ஆகும்.

இத்தல வரலாறு முதலில் வித்துவான் திரு. **ச. தண்டபாணி தேசிகர்** அவர்களாலும், பின்னர் புலவர்

மாமணி திரு. **ஆர். பஞ்சநதம் பிள்ளை** அவர்களாலும் எழுதப்பெற்றுச் சில பதிப்புகள் வெளிவந்தன. அதை யொட்டியே இப்பதிப்பு புதிய முறையில் புராண முறை வைப்பினில், திருவருள் தூண்டுவதினால் எழுந்த சில புத்தம் புதிய கருத்துக்களையும், சிறப்பியல்புகளையும், கல்வெட்டுச் செய்திகளையும் சேர்த்து எழுதப்பெற்று பதினோராம் பதிப்பாகத் திருக்கோவிலாரால் வெளியிடப்படுகிறது.

இக்கோயில் வரலாற்றினைச் செப்பமுற எழுதி உதவுக என அன்பால் பன்முறை உரைத்து ஊக்கிய இக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. **த. நாகராஜன்** பி. எஸ்சி. அவர்கள் கரும்பு தந்த தீஞ்சாறே, கனிதந்த நறுஞ்சுளையே, கவின் செய்முல்லை அரும்பு தந்த வெண்ணகையே, அணி தந்த செந்தமிழே என்றெண்ணுவதில் அழுந்திய நாட்டம் உடையவர்கள். செந்தமிழ்த் தெய்வமாய் வெண்ணெய்ப் பெருமானிடத்திலும் அருள்மிகு சிங்காரவேலவரிடத்திலும் பற்றுள்ளம் மிக்கவர்கள்.

"காலம் உண்டாகவே காதல் செய்துய் மின் தன் அடியவற்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்ற மணிவாசக மொழியை செயல்படுத்து பவர்கள் அவர்களது அயரா அன்பும் அரும் பணியுமே இந்நூலை உருவாக்க எனக்கு முன்னின்றன. வெண்ணெய்ப் பெருமான் உண்ணின்று உணர்த்தினான். நூல் முடிந்து அன்பு உலகினில் இன்று மலர்கின்றது. வெளி வருகின்றது. இதனை வெளியிடுகின்ற அறங்காவலர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

இக்கோயில் வரலாற்றினை நன்கு படித்துணர்ந்து வெண்ணெய்ப் பெருமான் சேவடி மறவாது, நலம் பல பெறுவார்களாக!

"வாழி சிவதருமம் வாழி சிவகருமம்
வாழியடி யார்கள் வளம்"

'சிற்றம்பலம்'
கும்பகோணம்,
1—3—80.

அன்பன்,
சொ. கணபதி தேசிகர்.

அணிந்துரை

முருகன் என்ற சொல்லானது "முருகு" என்ற சொல்லிலிருந்து முகிழ்ந்தது. முருகு என்றால் அழகு, இளமை, மணம் என்று பொருள். இந்த சொல்லிற்கு இணங்க, அழகே வடிவாக இக்கோயிலில் காட்சித் தருகிறார் முருகப்பெருமான். இக்கோயிலின் மூலவப் பெருமானாக வீற்றிருக்கும் நவநீதேஸ்வரர் யாரால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற புராண வரலாற்றினையும் அம்பாளின் பெருமைகளையும், பக்கத்திலுள்ள கோலவாமனப் பெருமாள் சிறப்பினையும், பிரகாரத்தில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் கீர்த்தியையும் இத்தலப்புராணம் தெளிவாகக் கூறுகிறது.

முருகப் பெருமானுடைய வரலாற்றினைக் கூறும் நூல் கந்த புராணம். அப்புராணத்தின் சிறப்பு அம்சமாகத் திகழ்வது சூர சம்ஹாரம் ஆகும். இப்புராணத்தின் உட்கருத்து மனிதர்களின் மும்மலங்களை முருகன் அழிக்கிறார் என்பதாகும். மூன்று அசுரர்களில், முதல் அசுரனாகிய யானைமகாசூரன் மாயை மலம் என்றும், இரண்டாம் அசுரன் சிங்கமகாசூரன் கன்ம மலம் என்றும், மூன்றாம் அசுரன் சூரபத்மன் ஆணவ மலம் என்றும் உணர்த்தப்பட்டுள்ளது. சஷ்டியின்போது முருகப்பெருமான் உலகமாதா பராசக்தியிடமிருந்து சக்திவேலைத் தவமிருந்துப் பெற்று சூரபத்மனை அழித்ததாக புராணம் இயம்புகிறது. பராசக்தியிடமிருந்து முருகப்பெருமான் தவக்கோலத்துடன் வேல் வாங்குகின்றபோது, பெருமானின் முகம் வியர்க்கும் காட்சி ஆண்டுதோறும் காணப்படுகின்ற அற்புத நிகழ்ச்சியாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, இத்தல வரலாற்றில், ஆலயம் என்றால் என்ன? ஆலயம் ஏன் தொழவேண்டும், ஆலயங்களில் பாடல்பெற்ற ஆலயம் மற்றவைகளைக் காட்டிலும் எவ்வாறு சிறப்புப் பெற்றுள்ளது என்றும் தெளிவாகவும் ஏற்கும் வகையிலும் விவரிக்கப்பட்டுள்ளது. அதாவது உத்தம மனிதர்களைக் காட்டிலும் ஞானிகள் அருளாளர்கள் பல கோடி மடங்கு உயர்ந்தவர்கள். அப்படிப்பட்ட அருளாளர்கள் மூல

விக்ரகங்களை நோக்கி தம் கண்களால் அருள் நெஞ்சத்திலிருந்து பதிகங்களை பாடும்போது அந்த அருள் எண்ணங்கள் அலைகளாகப் பரவி மூல விக்கிரகங்களில் பதிந்து அருள் திரண்டு குடிகொள்கிறது. அப்படிப்பட்ட அருள்சக்தி பதிந்த விக்கிரகங்களை பாமரமக்கள் தரிசிக்கும்போது, அந்த அருள் பாமரமக்களை வந்து அடைகிறது. அந்த அருள்சக்தி பாமர மக்கள் உய்வதற்கு வழி வகுக்கிறது. நாளடைவில் முக்தி பெறுவதற்கும் காரணமாகிறது. எனவே ஆலயம் தொழுது இறைவன் அருளைப் பெற முயல்வோமாக.

கு. ந. அழகப்பன், *பி.எஸ்சி., பி டி., பி.எல்.,*
துணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
தஞ்சாவூர். 11—2—88

ஆலய அறங்காவலர்கள் குழு:

1. திரு கு. பிரபாகரன், அறங்காவலர் குழுத்தலைவர்.
2. திரு மா. மாணிக்கம் முருகப்பன்
3. திரு மா. தியாகராஜன்
4. திருமதி ப. வசந்தா
5. திரு பி. என். சுப்பிரமணியன்

(2–5) அறங்காவலர்கள்.

உ
சிவமயம்

நீலம்நெய் தல்நில விம்மல ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வளம் மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னாளையொர் பாகன்வெண்
ணெய்ப்பிரான்
பால்வண் ணன்கழல் ஏத்தநம் பாவம்ப றையுமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிக்கல் - கோயில் வரலாறு

எப்போதும் வற்றாத நீர்ப் பெருக்கையுடைய காவிரி நதி பாயும் நாடு சோழநாடு. "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி" என்று பட்டினப்பாலை என்னும் நூல் கூறுகிறது. "அண்ணல் பாகத்தையாளுடைய நாயகி உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது" என்று சேக்கிழார் காவிரி நதியைப் போற்றுகிறார். சோழநாடு பூவினுள் பதுமம் போல்வது; புருடர்களில் திருமால் போல்வது; காவினுள் கற்பகம் போல்வது; கலைகளுள் ஞானம் போல்வது; அறத்துள் இல்லறமே போன்று இலங்குவது. அத்தகைய நாட்டில் உள்ள சிவத்தலங்களில் சிக்கல் ஒன்றாக விளங்குவது ஆம். அதன் பழம்பெரும் பெருமையை முறையாகக் காண்போம்.

சோழ நாடு - சிறப்பு

சோழ நன்னாடு பாரத நாட்டின் கண்ணே தென்பால் உள்ள தொன்மை சான்ற நன்னாடாகும். பல வளங்களும் மலிந்த தன்மை சான்றது. நல்லறிவுடையோர் புகழும் நன்மை மிக்கது. வேற்று மன்னரும் விரும்புந் தகையதாய், வெம் பிணியிலதாய், கேடிலா விளைவதாய், அரசு உவப்புறுவதாய் அமையும் சிறப்பு மிக்கது. வயற்புலங்கள் நிரம்பும் நீர்மையது.

ஆலயங்களும் மணிமாடங்களும் மாமறை ஓதும் மறையவர் இருக்கைகளும், பல சிவ யோகியர் இருக்கைகளும் நிறைந்த நீர் நாட்டியலைச் சொல்லவும் எளிதோ? திருக்கயிலையிலிருந்து தியாகேசரும் மோனயோகியரும் பூவுலகில் வந்து அமர்ந்தருளும் இடம் சென்னி நாடாகும். மன்னுயிரனைத்தும் ஓம்பிக் குலந்தரு விண்ணுளாரும் கூடி வந்தாடப் பெற்று நிலந்தரு திருவிற் பொங்கி திகழ்வது பொன்னியாறு. அப்பொன்னியாறு பொன்னிறைக்கும் நாடு நம் சென்னி நன்நாடாகும். திருஞானசம்பந்தசுவாமிகள் போன்ற சிவ ஞானச் செம்மல்கள் திருவவதாரம் செய்த நாடு. வையம் புகழும் மறைக்காடு, வயங்கிடு நாகைக் காரோணம். வெய்யவனுகா நள்ளாறு, திருச்சிக்கல். முல்லைவாயில் முதல் அளவிறந்த தலங்கள் தன்னுட்கொண்டு விளங்குவது. அறவோர் இருக்கையும் ஆசில் சைவ மடாலயங்களும் நிறைந்தது. "தண்ணீருங் காவிரியே, தார்வேந்தன் சோழனே, தாவாமேன்மை மண்ணாவதும் சோழ மண்டலமே" யென்றுரைத்த வார்த்தைகளால் சோணாடு பொலியுமெனில் அதன் வளத்தை அளவிட்டுக் கூற இயலாதது ஆகும்.

திருநகரச் சிறப்பு

அலைமகளும், மலைமகளும், நாமகளும் நண்ணியமர்ந்து; நாளும் நாமலி புலவரேத்த நலந்தரும் தன்மை வாய்ந்தது திருச்சிக்கல் ஆகும். எண்ணரும் செல்வத்தோடு போகமும் எய்தி நாளும், நண்ணரும் ஒழுக்கம் வாய்ந்த நன்மக்கள் வாழும் தலமாகும். சோழ மண்டலத்தில் நடுவணமைந்த செம்மணியே போலுந் திகழ்வது. மங்குல் தோயும் மாட வீதிகளில் வேளாண் மாந்தர் திருமனைகள் எண்ணில உண்டு. வேளாளர்கள் வெண்ணீறு பூசித் திகழ உருத்திராக்கம் பூண்டு, பொருந்தவே திருவைந்தெழுத் தோதிப், புனல் மலராதி கொண்டு வேனெடுங்கண்ணி பாகனை யருச்சித்தேத்திப் பெருந்தமிழ் நலம் பாராட்டும் பெற்றிமை வாய்ந்தவர்கள். வருவிருந்தெதிர் கொண்டுள்ளம்

மகிழ்ந்து, முகமன் கூறித் திருமலராதி நல்கிச் சிவார்ச்சனை செய்வித் தன்பால் அருகினில் அமரச் செய்து, இனிதினட்ட அறுசுவையமுதமூட்டிப், பொருவறு மடைகாய் நல்கிப் போந்ததோர் குறிப்புந் தேர்ந்தருள் புரிவர்.

"பேச்சாலும் எழுத்தாலும், பாட்டாலும் கூத்தாலும் பிறர் உவக்க ஓச்சுகவே மணி முரசு வீதியெலாம் வரிசையுற உலவா நிற்பீர்; ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற இன்ன லுக்குள் இன்ப வெள்ளம் பாய்ச்சாதோ பொதுத் தொண்டு? பைந்தமிழ்ச் செய்யும் தொண்டு பருக வாரீர்!" என்ற நம் கவிஞர் வாக்குப்படி அழைக்கும் செம்மனச் சீலர்கள் நிறைந்து வாழும் திருவீதிகளை உடையது.

திருத்தலச் சிறப்பு

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்ற தாயுமானவர் வாக்குப்படி இறைவன் மூர்த்தியாகவும் தல வடிவமாகவும், தீர்த்த வடிவினனாயும் விளங்குகின்றான். திருச்சிக்கல் மல்லிகை வனமாக முற்காலத்தில் விளங்கியது. மல்லிகை வனச் சூழலில் நடுவண் சிக்கல் ஞான நாயகன் இனிதமர்ந்திருந்தான். கடனாகைக் காரோணத்தின் பஞ்சக் குரோசத் தலத்தில் ஒன்றாக இத்தலம் விளங்குகிறது. பின்பு ஒருசமயம் காமதேனுப் பசுவின் பால் பெருகியதால் உண்டான வெண்ணெய்யை வசிட்ட முனிவர் சிவலிங்கமாக்கிப் பூசித்த இலிங்கமாக அமைந்த நற்சிறப்பினை வெண்ணெய்ப் பிரானாக நாம் இதுபோது காண்கிறோம். உழுவலன்பு அமைத்து தலமெலாம் தரிசித்து ஓங்கு புண்ணியங்கொள நினைந்தோர், தழுவுசீர்ச் சிக்கலைத் தரிசித்தால் அப் பயன் பெறுவர் என்பது சாதகமாகும். விசுவாமித்திரர், வசிட்டர், அகத்தியர், கார்த்தியாயனர், நாரதர் முதலிய முனிவர்களும் இத்தலம் சார்ந்து வழிபட்டுப் பேறு பெற்றனர் என்னில் இத்தலத்தின் பெருமை சொல்லொணாத நலத்தது ஆம்.

திருச்சிக்கல் தலம் பரவுவார் பாவமுற்றொழிந்து துன்னிய பூதப் பிரேத பைசாசத் தொடர்பறச் சந்ததி பெருக, முன்னிய உலகினில் களித்து வாழ்ந்திருந்து முத்தியின்பமும் அடைவர்.

தீர்த்தச் சிறப்பு விசேடம்

“சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார்தாமே, திருவாலங் காடுறையும் செல்வர்தாமே” என்ற நமது திருமுறை வாக்கிற்கிணங்க, இறை வடிவினதாய்ப் பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உண்டு.

பாற் குளம் :- கோயிலுக்கு மேற்கில் உள்ளது. காம தேனுப் பசுவின் பாலினால் இக்குளம் நிறைந்திருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது. அமிர்த தடாகம் என்று சொல்லப் படும். க்ஷீரபுஷ்கரணி என்றும் சுதாநிதி என்றும் வட மொழியில் சொல்லப்படுகின்றன.

கயா தீர்த்தம் :- இத்தீர்த்தத்தில் கோலவாமனப் பெருமான் நித்தலும் நியமமாக நீராடித் தவம் செய்து நவநீதப் பெருமானைப் புனல் மலராதி கொண்டு அருச்சித்த நற்சிவப் பேற்றினால் **கயா மாதவன்** என்ற திருப்பெயரை அடைந்தார். மேற்றிசையில் உள்ளது.

இலக்குமி தீர்த்தம் :- கிழக்கில் உள்ளது. இலக்குமி இக்குளத்தில் நீராடித் தவஞ்செய்து, சிவ பூசனையியற்றிக் கோலவாமனப் பெருமாள் திருமார்பகம் சார்ந்தார்.

அம்மா குளம் :- வேனெடுங்கண்ணியின் திருக்கடைக் கண் பார்வையால் அருண்மிகு தீர்த்தமாகும். கோயிலுக்கு வடக்கில் உள்ளது.

விருத்த காவேரி :- இத்தலத்துக்குத் தெற்கே ஓடுகிறது. தற்போது ஓடம்போக்கியாறு என வழங்குகிறது.

இத்தீர்த்தங்களில் விருப்போடு நீராடுவோர், பாபபல் பிணியும் தீர்ந்து பார் முழுவதும் புரந்து, நேய விண்பதமுந் துய்த்து நின்மலராகி வாழ்வார்கள்.

(மல்லிகை வனம் என்னும் இத்தலம் கடம்பவனம், தில்லை வனம், முல்லை வனம், வில்வ வனம், வேத வனம், மருத வனம் போன்று மிகச் சிறப்புடைத்தாகும்.)

மல்லிகை வனம் - திருச்சிக்கல் என்னும் தலமாகியது

மல்லிகை வனம் எனும் இத்தலத்தில் வசிட்ட முனிவர் ஆசிரமம் தனக்கென அமைத்து நாடோறும் நீடுதவம் செய்து, தெய்வ மணங்கமழ் மல்லிகை வனத்தீசனைப் பணிந்து பூக் கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றி வரலானார். அவ்வமயம் காமதேனுப் பசு இத்தலம் சார்ந்து பாற்குளத்தில் நீராடி முன்பு செய்த தவத்தின் பயனால் மல்லிகை வனத்தீசனைப் போற்றி மாண்புறு பயனைப் பெற்றது. காமதேனுப் பசுவின் பால் பெருகியதால் உண்டான வெண்ணெய் நீர்நிலை பூராவும் பரவியது. ''செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும், மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள்'' என்ற சேக்கிழார் திருவாக்குப்படி, திருவருட் குறிப்பு இருந்த வண்ணம் வசிட்டர் இவ் வெண்ணெய்யைக் கண்ணுற்றார். ''தவம் செய்வார் தம் கருமம் செய்வார்'' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க அவ் வெண்ணெய்யை ஒன்றாகச் சேர்த்து சிவலிங்கமாக அமைத்து, தன் ஆன்மார்த்த பூசையைத் தொடங்கிச் சிவபூசனை செய்யலுற்றார். பூசனை இனிது நிறைவேறியது. இலிங்கத்தை வேறிடத்தில் அமைக்க முயன்றார், இலிங்க வடிவினன் ''கல்'' என அசையாது நின்றார். வசிட்ட முனிவர் ''செல்வமே சிவபெருமானே யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன். எங்கெழுந்

தருளுவது இனியே'' என்ற திருவாசகச் சொற்படி ''சிக்'' எனப் பிடித்தார். அன்று முதல் **சிக்கல்** எனப் பெயர் வரலாயிற்று என்பர் ஆன்றோர்.

'' செம்மனத்தர் மிகுந்த மாதவர்
நன்மை பெற்ற உளத்திலே மலர்
செல்வச்சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே''

— திருப்புகழ்

செல்வச் சிக்கலில் முருகப் பெருமான் சிங்கார வேலவ ராக அமர்ந்து காட்சியளிக்கிறார். முருகப் பெருமானுடைய பல பெயர்களில் சிகிவாகனன் என்ற திருப் பெயரும் ஒன்றாகும். சிகிவாகனனது தியான வடிவம் சிங்கார வேலவர் போன்றமைந்துள்ளது. சிகிவாகனன் என்றால் மயில் மீது இவர்ந்து விளங்குபவன் என்று பொருள்படும். (சிகி - மயில்) **சிகிவாகனன் இத்தலத்தே மன்னி வீற்றிருப்பதால் ''சிக்கல்''** என எண்ணுவர் மேலோர். சிக்குதல் கன்னட நாட்டுச்சொல். இதற்கு அகப்படுதல் என்று பொருள். இது அயல் மொழித் திசைச் சொல் ஆகும். சிவபெருமான் பக்தி வலையிற் படுபவன். அன்பு வலையிற் சிக்குபவன். சிவபெருமான் ''விறகில் தீயினன் பாலிற் படு நெய் போல் மறைய நின்றுளன்'' என்று அப்பர் பெருமான் திருவாய் மலர்ந்தருளுகிறார். வசிட்டர் அன்புக் கரங்களில், அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாயிருப்பவன். வெண்ணெய்ப் பிரானாக அமர்ந்தான். அவரது அன்பினால் சிக்கினான். **சிக்கலிலே** அமர்ந்து அருள் புரியலானான் எம்மிறையீசன். பண்பட்ட அடியார்களுடைய உள்ளமெனும் வன்மனப்பாறையை மென்மையான வெண் ணெய் போலாக்கும் பரம கருணாநிதியாகிய சிவபெருமான், ஆன்ம கோடிகளின் சிக்கலைக் களையும் பொருட்டு இனிது இத்தலத்தே மேவியமர்ந்து நாளும் வழிபடும் அடியவர்கட்கு இன்னருள் புரிந்து வருகின்றான். ஆதலின் **''திருச்சிக்கல்''** எனப் பெயர் தோன்றக் காரணமாயிற்று என்று கனிந்த மனமுடைய சிவ பக்தியிற் சிறந்தோர் சிந்தனையில் இருத்துவர்.



அருள்மிகு சத்தியதாட்சி (வேல்நெடுங்கண்ணி)



கோயிலின் உட்பிரகாரம்

17

நவநீதேச்சுரர் — காட்சிச் சிறப்பு

இறைவனுடைய திருவருளை ஆன்மாக்கள் பெறுதற் குரிய இடம் திருக்கோயிலே என்பது சான்றோர் கருத்து. எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளைத் திருக்கோயில் ஒன்றாலே பெறமுடியும். திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிகள் எல்லாம் சிவ ரூபமே என்பது சாத்திரமுடிபு. திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னை "சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனாங்கே" என்பது சிவஞான சித்தியார். ஆவின் பால் உடல் முழுதும் பரவியிருந்தாலும் அதனைப் பெறுவது அதன் மடியிடத்தே போல, எங்கும் சிவனருள் பெருகியிருப்பினும் அதனைப் பெறுவதற்குரிய இடமாயிருப்பது திருக்கோயில் ஒன்றேயாம்.

> **"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற**
> **சங்கமத்துவம் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்**
> **ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்**
> **பாவுமுலைக் கண்மிகுதிப் பார்"**

—சிவஞானப்பிரகாச வெண்பா.

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த பெருங் கருணையால் மாகேசுர மூர்த்தங்கள் முதலிய பல வடிவங் கள் கொள்கின்றார். அவ்வடிவங்கள் அனைத்தும் உயிர்கள் உய்தல் வேண்டுமென்ற கருணையின் விளைவே. இவ்வாறு மூர்த்திகளாய் வருவதுடன் ஆசிரியத் திருமேனியுங் கொண்டு பக்குவமுடைய உயிர்கட்குப் பரகதி கொடுப்பது அவனருள் இயல்பு.

இயல்பாகவே மலமற்றதாய் யாரும் அறிவதற் கரியதொரு பரம்பொருளாகிய சிவபெருமான் தவ முதிர்ச்சியால் பக்குவமடைந்த உயிர்கட்கு அருள்புரியும் பொருட்டு, ஆசிரியனாய்த் திருமேனிகொண்டு எழுந்தருளி

வந்து பரஞானத்தைக் கொடுத்து அவைகளைத் தன் தன்மையெய்தும்படிச் செய்தருளுவான் என்னும் பொருள் படத் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் பாடியருளிய திருவுந்தியார் திருப்பாடல் வருமாறு.

''அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகலமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற''

சீவன் முத்தராயிருப்போர்க்குங் கூட திருவேட வழிபாடும், ஆலய வழிபாடும் வேண்டும் என்பது சைவ சித்தாந்த பிரதிட்டாச்சாரியராகிய மெய்கண்டார் திருவுள்ளமென்பதனைச் சிவஞானபோத பன்னிரெண்டாம் நூற்பா பின் வருமாறு விளக்குகின்றது.

''செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலர்ந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''

சிவஞான போதத்தின் வழி நூலாகிய சிவஞான சித்தியாரும் இக்கருத்தினைப் பின் வருமாறு விளக்கிக் காட்டுகின்றது.

''செங்கமலத் தாளிணைகள் சேர வொட்டாத
திரிமலங்கள் அறுத்துஈச னேசரொடும் செறிந்திட்டு
அங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி''

இத்தகைய திருக்கோயில்கள் புண்ணிய பூமியாகிய பாரத நாட்டில் வட கயிலாய முதல் தென் குமரி வரை எண்ணற்றன உள்ளன. அவற்றுள் பொதுவாக 1008 என்பது ஆன்றோர் முடிவு. அவற்றில் சைவ ஞானாசிரிய

மூர்த்திகளான சமயாசிரியர் மூவரால் பாடல் பெற்ற சிவத் தலங்கள் 274. அவற்றைப் பின்வருமாறு பாகு பாடு செய்வது எளிதில் நினைவு கொள்ள வாய்ப்பாகும்.

சோழ நாடு (அ) காவிரிக்கு வடகரை	63
(ஆ) காவிரிக்கு தென்கரை	127
பாண்டிய நாடு	14
சேர நாடு (மலை நாடு)	1
கொங்கு நாடு	7
நடுநாடு	22
தொண்டை நாடு	32
துளுவ நாடு	1
ஈழ நாடு	2
வட நாடு	5
மூவரால் பாடல் பெற்ற சிவத்தலங்கள்	274

சோழ நாட்டுக் காவேரித் தென்கரைத் தலங்கள் 127-ல் 83-ஆவது தலமாகத் திருச்சிக்கல் கோயில் விளங்குகிறது. இத்தலத்துக்குக் கிழக்கில் நாகைக் காரோண மும், மேற்கில் கீழ்வேளூரும் உள்ளன. பல சிறந்த வைப்புத் தலங்களும் இந்நற்றலத்தின் நான்கு பக்கங்களிலும் சிறந்து விளங்குகின்றன.

"மற்றவர் தம் ... ...
கற்றவர் வாழ் கடல்நாகைக் காரோணத்துக்
கண்ணுதலைக் கைதொழுது கலந்த ஓசைச்
சொற்றமிழ்மா லைகள்பாடிச் சிலநாள் வைகித்
தொழுதகன்றார் தோணிபுரத் தோன்றலார் தாம்"
"கழிக்கானல் மருங்கணையும் கடல்நாகை
யதுநீங்கிக் கங்கை யாற்றுச்
சுழிக்கானல் வேணியர்தம் வேணியர்தம் பதியலவும்
பரவிபோய்த் தோகை மார்தம்

விழிக்காவி மலர்பழனக் கீழ்வேளூர் விமலர்
கழல் வணங்கி ஏத்தி
மொழிக்காதல் தமிழ்மாலை புனைந்தருளி அங்ககன்
மூதூர் நின்றும்'' [றார்

என்ற சேக்கிழார் திருவாக்குப்படி, திருஞானசம்பந்த சுவாமிகள் நாகைக் காரோணம் பணிந்து, பின் ''பதி'' பலவும் பரவிப்போய்...... ... ''கீழ்வேளூர் விமலர் கழல் வணங்கி'' என்று கூறியபடி, அவற்றுள் திருச்சிக்கலும் போந்து, நவநீதேச்சுரரைப் பணிந்து ''வானுலாவுமதி வந்துலவும் .... '' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளினார் என்பதையும் அறியலாயிற்று.

திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் இத்தலத்தின் இயற்கைக் காட்சிகளையும், செழுமைகளையும் பின்வருந் தொடர்களில் படமாகக் காட்டியுள்ளார். அவையாவன:-

''தேனுலாவும் மலர்ச்சோலை மல்கும் சிக்கல், மடங்
கொள்வாளைக் குதிகொள்ளும் மணமலர் பொய்கைசூழ்
சிக்கல், சேலுமாலுங் கழனிவ்வளம் மல்கிய சிக்கல்
செந்து வண்டின்னிசை பாடல் மல்கும் சிக்கல், தெங்கு
துங்கப்பொழில் செல்வமல்கும் சிக்கல், வண்டிரைக்கும்
மது விம்மிய மாமலர் பொய்கைசூழ் சிக்கல், செந்நெ
லாரும் வயற் சிக்கல், செந்தண் பூம்பொழிற் சிக்கல்''

என்பன.

சிவபெருமானுடைய வீரச் செயல்களையும், பெருமைகளையும் குறித்துவரும் தொடர்கள் :-

'வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப் பெருமான்'
'விடங்கொள் கண்டத்துப் பெருமான்'
'பால்வண்ணன் வெந்த வெண்ணீற்றண்ணல்'

'வெங்கண் வெள்ளேருடையான்'
'மதில் மூன்றுடனே எரியாய்விழ வெங்கணையொன்று
செலுத்திய சோதியான்'
'தென்னிலங்கைக் கிறைவன் முடிபத்தோடு தோள்
நெரியச் செற்ற தேவன்
சிட்டன், மாமறைப்பட்டன்
வெந்த நீறணியும் பெருமான்'

பெருமானை வழிபடுவதால் வரும் பயன்களைப் பின் வருமாறு காட்டியுள்ளார்.

"வெண்ணெய்ப் பெருமானடி ஞானமாக நினைவார்... வினையாயின் நையும், அல்லல் அறுப்பர். நம் பாவம் பறையும், வினையாயின தேய்வது திண்ணம், மனமே நினையாய் வினை ஓயவே, பறையும் நம் பாவமே பட்டன் சேவடி பணிமின் பிணி போகவே, பெருமானடி மேவுவர்" என்பன.

வேணெடுங்கண்ணி – சிறப்புக் காட்சி

திருவருட் சக்தி:- கோயில் அமைப்புத் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாயின. இத்துணை ஆண்டுகளாகப் பல கோடி மக்கள் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள திருவுருவத்தினை நோக்கி "தெய்வமே" என்று நினைந்தும், வாழ்த்தியும், வணங்கியும் இருக்கிறார்கள். அவர்களது தெய்வீக எண்ணங்கள் திருவுருவத்தில் படிந்து ஒன்றுடன் ஒன்று ஒன்றித் தெய்வீகச் சக்தி பெற்றுள்ளன. நன் மக்கள் நோக்கினின்றுந் திரளும் சக்தியைப் பார்க்கிலும் ஞானிகள் நோக்கினின்றும் திரளும் சக்தி வல்லமை வாய்ந்தது. இச்சக்தியினும் பண்டை நற்றவத்தால் தோன்றிய பரமனைப் பத்தி செய்யும் தொண்டர்களான நாயன்மார்கள் நால்வர் பெருமக்கள் நோக்கினின்றும் பிறப்பது சொல்லொணா ஆற்றல் வாய்ந்தது. அப்பர், சம்பந்தர், சுந்தரர்,

மணிவாசகர் என்ற நால்வரும் தெய்வத் திருவருட் சக்தி மயமானவர். எல்லாம் வல்லவர். தங்கள் ஆன்ம நலனை மட்டும் கருதி வாழ்ந்தவர்களல்லர். அவர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவரும் பெறுதல் வேண்டும் என்ற கருணையில் மூழ்கியவர்கள். அவர்கள் தமிழ் மறைகளை உலகுய்யத் தந்தனர்.

எண்ணத்தின் ஆற்றல் :- கோயில்களுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தினார்கள். அவர்களது தெய்வீகச் சக்தி நூல்களிலும் கோயில்களிலும் இறங்கியுள்ளது. நால்வர் அருளிய மறைமொழிகட்கு எவ்வளவு ஆற்றல் உண்டோ, அவ்வளவு ஆற்றல் அவர்தம் திருநோக்கம் பெற்ற கோயில் கட்குமுண்டு. அக்கோயில்களை விடுத்து அவரது நல்லெண் ணங்கள் நீங்கவே மாட்டா. உலகிலுள்ள தீமைகளெல்லாம் திரண்டு ஒருருக்கொண்டு அக்கோயில்களைத் தாக்கினாலும், அங்குள்ள நல்லெண்ணங்கள் அசைய மாட்டா; அகல மாட்டா; அத்தீமைகளையெல்லாம் நீறாக்கும் ஆற்றல் பெரியோர் நோக்குப் படிந்த கோயில்களுக்குண்டு; மலைகள் அழியலாம்; கடல்கள் அழியலாம்; உலகம் அழியலாம்; திங்கள் அழியலாம்; ஞாயிறு அழியலாம்; பிற அழியலாம்; பெரியோர் எண்ணங்கள் அழியா. கோயில் கட்டிடங்கள் அழிந்தாலும் அவைகளைச் சூழ்ந்துள்ள நல்லெண்ணங்கள் அழியா. அவை மீண்டும் ஒரு காலத்தில் கோயிலாகும்.

கோயில் கல்லன்று; மண்ணன்று; சுண்ணமன்று; அஃது எண்ணம்; நல்லெண்ணம்; சக்தி வாய்ந்த எண்ணம்; தெய்வீகச் சக்தி வாய்ந்த எண்ணம். அவ்வெண்ணம் இந் நாளிலும் தியானத்திற் சிறந்த அன்பர்கட்குப் பெருஞ் சக்தியை — உலகைத் திருத்தும் வல்லமையை — கடவுட் டன்மையை வழங்கி வருகிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த கோயில் வழிபாடு இடை யீடின்றி வளர்ந்தோங்கல் வேண்டும். அதற்கு முட்டு

நேரின் உலகம் இன்னலுறும். அவ்வின்னலைப் போக்கவும் வழிபாட்டையே கடைப்பிடித்தல் வேண்டும். வழிபாடே தியான யோகம்; தவம்.

வழிபாட்டின் பயன்: மக்களிடத்துள்ள தெய்வீகச் சக்தி ஒடுங்கிக் கிடக்கிறது. அச்சக்தி இடையறாத கோயில் வழிபாட்டால் எழுச்சி பெறும். மக்களிடத்து இயல்பாக அமைந்துள்ள தெய்வீகச் சக்தியை எழுப்புதற்குக் கோயில் வழிபாடு ஓர் கருவி. கோயில் வழிபாட்டால் எழுந்து பொங்கிப் பெருகுஞ் சக்தியைப் பெற்றவர் நோக்கு எங்கெங்கே பொருந்திப் படிகிறதோ, அங்கங்கெல்லாம் அந்நோக்கின் வாயிலாக அவரது சக்தியும் இறங்கிப் படியும். சிறப்பாகக் கோயிலில் நன்கு படியும். பசுமரத்தாணிபோல் படியும் சக்தியை எழுப்புதற்குக் கோயில் கருவியாயிருப்பதால் அதனிடம் சக்தி விரைந்து நன்கு படிந்து சூழ்ந்து நிற்கும்.

அம்மையின் காட்சி: வேனெடுங்கண்ணி என்னும் திருப் பெயரோடு உமா தேவியார் இத்தலத்தே தெற்கு நோக்கி திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ளாள். வடமொழியில் சத்தியாயதாட்சி என்று வழங்கப்படுகிறது. தமிழ்ப் பெயரை நோக்கும்போது வேல் போன்ற நீண்ட கண்களையுடையவள் என்பது பொருள் ஆகும். "வேலொண் கண்ணியினாளை யோர்பாகன் வெண்ணெய்ப் பிரான்" என்று திருஞான சம்பந்தர் பாடுகிறார்.

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய் நிற்பவள்; வான் அந்தமான வடிவுடையாள்; மறை நான்கினுக்கும் அந்தமாய் விளங்குபவள். வார்சடையோ னருந்திய நஞ்சையமுதாக்கிய அம்பிகை, சுருதிகளின் கொழுந்தாவாள். பனிமலர்ப் பூங்கணையுங் கருப்பஞ் சிலையுமென் பாசாங்குசமுங் கையில் அணையுந் திரிபுர சுந்தரியாவள் புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவள்; வெளிமுதற் பூதங்களாகி விரிந்தவள்; மணி

யாகவும், மணியில் ஒலியாகவும், மணி புனைந்த அணி யாகவும் அணிகின்ற அணிக்கு அழகாகவும், அமரர் பெரு விருந்தாகவும் காட்சி அளிப்பவள். சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங் கொடியாவாள். அல்லும் பகலும் தொழுமவர்க்கு அழியா அரசினையும் செல்லும் தவ நெறியும் தந்தருளுவாள். ஞானநாயகி, நான்முகி, நாராயணி; கைநளின பஞ்ச சாயகி; சாம்பவி; சங்கரி; சாமளை; மாலினி; வராகி; சூலினி; மாதங்கி என்று பேசும்படியான பெருமையினை யுடையவள் ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய் நிறைந்து நிற்பவள்.

வேனெடுங்கண்ணியை கண் களிக்கும்படி கண்டு கொண்டால் தனந் தரும்; கல்வி தரும்; ஒரு நாளுந் தளர்வறியா மனந் தரும்; தெய்வ வடிவுந் தரும்; நெஞ்சில் வஞ்சமில்லாத இனந் தரும்; நல்லனவெல்லாம் தரும். ''விழிக்கே அருளுண்டு'' என்று வேனெடுங்கண்ணியைத் தொழுது பயன் பெறுவார்களாக!

அருள்மிகு சிங்கார வேலவர் சூரனைச் சம்ஹாரம் செய்யச் சக்தி வேலினை இந்த வேனெடுங்கண்ணியிடம் பெற்றார் வேலைப் பெற்றபின் சிங்கார வேலவர்மேல் வியர்வைத் துளிகள் காணப்படும். முருகனடியார்கள் ஆண்டுதோறும் பெறுதற்கரிய இக்காட்சியினைக் கண்களாரக் கண்டு முருகானந்தக் கடலில் திளைத்துப் பரவச மடைகின்றனர்.

அருள்மிகு தியாகராஜ மூர்த்தியின் சிறப்பு

திருவாரூர் முதலிய ஏழு விடங்க க்ஷேத்திரங்களில் தியாகராஜப் பெருமான் நடனத்தைத் தரிசிக்கலாம். கூத்தப்பிரானைப் போல் காலைத் தூக்கி ஆடுகின்ற திருவுருவம் தியாகராஜப் பெருமானுக்கில்லை. ஏனைய

சிவாலயங்களில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தியைப் போலவே வலக்காலைத் தொங்கவிட்டும், இடக்காலை மடித்துக்கொண்டும் சுகாசன மூர்த்தியாக இவர் விளங்குகிறார். இவர் உட்கார்ந்த நிலையிலேயே நடனம் செய்பவர். திருமாலின் இதயத்தில் எப்போதும் வாசம் செய்பவராகவும் மூச்சு உட்சென்று வெளிவரும் அசைவினால் விஷ்ணு இதயத்தில் எப்போதும் ஆடுபவராகவும் இவரைப் புராண வரலாறு கூறும். திருவாரூர் தியாகராஜர் நடனத்திற்கு "அசபா" நடனம் என்று பெயர். இவர் எழுந்தருளும்போது செங்குத்தாக மேலும் கீழும் நடனம் செய்வது "அசபா" நடனம் எனப்படும். இவ்வாறே திருக்காராயில் என்னும் தலத்தில் குக்குட நடனமும் திருக்கோளிலியில் 'பிருங்க' நடனமும், திருநள்ளாற்றில் உன்மத்த நடனமும், நாகைக் காரோணத்தில் "பாராவாரதரங்க" நடனமும், திருமறைக் காட்டில் "ஹம்சபாத" நடனமும், திருவாய்மூரில் "கமல நடனமும்" அவ்வத்தலத்திலுள்ள தியாகராஜ மூர்த்தி செய்வர். இத்தலத்தில் தியாகராஜர் சந்நிதியும் விளங்குகிறது. ஆனால் இது சப்த விடங்க க்ஷேத்திரங்கள் என்ற கணக்கில் சேராதது ஆகும். இங்கு மரகதலிங்கம் ஒன்று உண்டு. மரகத விடங்கர் எனப் பெயர் சேமமாக வைக்கப்பெற்றுள்ளது.

அருள்மிகு சிங்காரவேலவர் சிறப்பு.

திருச்சிக்கலாகிய இக்கோயில் சிவபெருமானுக்குரிய கோயிலாக இருப்பதுடன் முருகப் பெருமானுக்குரிய முக்கிய தலமாகவும் விளங்குகிறது

குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் ஆவன். குறிஞ்சி நிலம் மலைப் பகுதியாகும். கட்டுமலையாகிய இத்தலத்தில் முருகன் சிங்காரவேலனாகக் காட்சி தருகிறான். ஆறுபடை வீடுகளில் குன்றுதோறாடலும் ஒன்று. அவ்வகையில் இத்தலம் கட்டு மலை ஆதலின், ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதலாம்.

முருகு என்பது இளமை, அழகு, மணம், தெய்வத் தன்மை முதலிய பொருள்களைக் குறிக்கும். இவைகளை யுடையோன் முருகன் ஆவான்.

ஐம்புல வேடரின் மயங்கி மாயக் குறிஞ்சியில் உலகத் தினைப் புனம் காக்கும் வள்ளிகளாம் நம்மை ஆட்கொண்டு உண்மை காட்டி நம்மொடு ஒன்றாய்க் கலப்பவன் இந்த முருகனே.

உலகத் துறைகளை அறு வகையாகக் கொண்டால் அவன் ஆறுமுகங் கொண்டு விளங்க ஒக்கக் காண்கிறோம்; உலகம் நம்மை மயக்குகிறது. பலப்பலவாய் விரிகிறது. குவிகிறது. ஆம் (Evolution, Involution) இவ்வாறு பல நிறத் தோகையை விரித்தாடிப் பின் சுருக்கும் மயில் மேல் ஏறுபவன் இம்முருகனே. மலை போன்ற ஆணவம் என்ற ஆனையை அடக்கி ஏறுபவனும் இம்முருகனே. வினை என எங்கும் முடி வின்றி ஓடித் திரியும் வரையாட்டினை அடக்கி ஏறுபவனும் இவனே ஆம்.

மாயா நகரில் வாழும் தாரகன் என்ற மாயையைக் கொல் வதும் இவன் வேலாம் மெய்யறிவே ஆம். பலபல தலையாய்க் கிளைக்கும் கருத்தின் வடிவான சிங்கமுகனைக் கொல்வதும் இவன் திருக்கை வேலே "மானம் ஒன்றே தடுத்ததம்மா" என்னும் ஆணவ வடிவான சூரனைப் பிளந்து ஒலியுலகாம் கோழியாகவும் ஒளியுலகாம் மயிலாகவும் அமைத்துக் கொண்டு விளங்குபவனும் அவனே.

ஈதொரு தொடலாகா நெருப்பு; தூய பேரறிவு; அழியா தது. வெட்டினாலும் வெட்டுண்ணாத உயிரின் அடிப்படை நுட்பம் இது. பேரறிஞரும் தாங்கலாகா ஆற்றல் இது. ஆனால் கற்பிற் சிறந்த தாய்மையின் வயிற்றில் இது அடங்கும் பலபல வடிவங்கொள்ளும் (பரிபாடல் கூறும் கதை இது)

அப்பாலுக்கு அப்பாலான சிவ அறிவும் பொறி உண் முகமாய் நின்றது வெளித்தோன்றுகிறது. வான் வழியே பரவு கிறது. வானம் தோன்றுகிறது. ஆம். வானும் அவன் வடிவம் காற்றோடே காற்றாய்ப் பரவுகிறது. ஆனால் காற்றும் அதனைப் பொறுப்பதற்கில்லை. தீயில் புகுகிறது. தீயொடும் முடியாது தீயும் தனக்குள் அடக்கிக்கொண்டு பொறுக்காத வகையில் செல்லத் தீ அதனை நீரில் வீழ்த்துகிறது. நீர் மட்டும் தாங்குமோ? கரையில் உள்ள பசும் புற் காட்டில் அதனைக் கொழிக்கிறது. ஐந்து பூதங்களாய்ப் பரவியும் அவற்றினையும் கடந்து அழகாய் இளமையாய்க் குழவியாய்த் திகழ்கிறது இது. நோன்பு நோற்ற தாயாரே இதனை வாரியணைத்துப் பாலூட்டமுடியும். ஆனால் அவர்களுக்கும் இதனிடையே தோன்றும் ஒருமைப்பாடு விளங்கவில்லை. திரு அருள் ஒன்றே அதனை வாரி அணைத்து ஒன்றாக்க முடியும். திருவருள் அணைத்த போது அறுவரும் ஒருவராயினர்.

''அருவமும் உருவுமாகி
  அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
  பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
  கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
  உதித்தனன் உலகம் உய்ய'' - கந்தபுராணம்

இக்கோயிலில் சிவபெருமானும், சிவ குமாரனான சிக்கல் சிங்காரவேலவனும் எழுந்தருளிக் காட்சி நல்குகிறார்கள். சிவபெருமானும், முருகப்பெருமானும் வேறல்லர். இதைச் சிவபெருமானே பார்வதிக்குக் கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதம கன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்

ஏதமில்குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில்வீடும் போற்றினார்க் கருள வல்லான்''
— கந்தபுராணம்.

முருகப் பெருமானுடைய பேரழகைப் பார்த்து அன்பர்கள் பலவாறாகப் பாராட்டியிருக்கிறார்கள். "அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக'' என்று முருகன் என்ற திருப் பெயரின் அருமைப் பாட்டை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் எடுத் தோதுகிறார். முருகப் பெருமானுடைய பேரெழிலைப் பற்றிச் சொல்லுகின்ற பெருமக்களுள் அருணகிரிநாதப் பெருமான் சிறந்தவர் என்று கொள்ள வேண்டும்

" என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் உள்ளத் துறை''

என்பது ஒரு பழைய பாட்டு.

கந்த புராணத்தில் முருகப் பெருமானுடைய பேரழகை அவனுடைய பெரும் பகைவனான சூரபன்மனே போற்று கின்ற வரலாறு வருகிறது. முருகன் சூரபன்மனோடு போராடினான். சூரனும் முருகனும் செய்தபோர் மிகப் பெரிய போர்.

சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள படை களையும் அழைத்து ஒருங்கு திரட்டிக்கொண்டு பெரிய தேரில் ஏறிப் போருக்குப்புறப்பட்டான். முருகக் கடவுளும் மனவேகம் என்னும் தேரின் மீது ஏறிக்கொண்டு போருக்குப் புறப் பட்டார். தேவர்களும் கலங்கினர். போர் தொடங்கிற்று.

அவுணர்கள் ஆறுமுகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டு தண்டு, வேல் வாள் முதலியவற்றையும் தெய்வப் படை களையும் சிந்தினர். வில்லை வளைத்து முருகன் நாணொலி செய்தார். அந்த நாணொலியாலேயே அவுணப் படைகள் சிதறின. முருகனும் சில கணைகளால் அவுணப் படைகள்

அனைத்தையும் அழித்தார். மேலும் வாராதபடி அண்டங்களின் வாயிலைக் கணைகளால் அடைத்தார். பானுகம்பன் என்னும் பூதத் தலைவன் வெற்றிச் சங்கு ஊதினான். பாஞ்சசன்யமும் திடீரென முழங்கியது. தேவர்கள் யாவரும் முருகன் தேர் மீது கொடியில்லாமை அறிந்து, அக்கினிதேவனைப் பார்த்து "முருகன் தேர் மீது நீ கோழிக்கொடியாகி இருக்க" எனப் பணித்தனர். அக்கினி தேவனும் அவ்வாறே கொடியாயினன்.

சூரபன்மன் கடுங்கோபங் கொண்டு தேவர் கூட்டங்களின் மீது அம்புமாரி பெய்தான். விண்ணில் நின்று போர் புரிந்தான். முருகனும் விண்ணுலகிலே சூரனோடு எதிர்த்தார். ஒருவர் கணைகளை ஒருவர் அழித்துப் போர் செய்தனர்.

விண்ணிற் செய்யும் அவர்கள் போரால் திசைகள் எரிந்தன. உலகம் நடுங்கின. இங்ஙனம் இடசாரி வலசாரியாகப் போர் நடக்கும் பொழுது சூரபன்மன் முருகக் கடவுள் மீது மழு, வச்சிரம், சூலம், வேல், எழு முதலியவற்றைச் சொரிந்தான். முருகக் கடவுளும் அவற்றை முறைமுறையாக அழித்தார். சூரபன்மன் வில்லோடு பூமியில் குதித்துப் பல கோடி கணைகளைச் சொரிந்தான். முருகன் அவற்றை அழித்து, அவன் தோள்மீது ஆயிரம் கணைகளை எய்தார். அவை மலைமீது வீழ்ந்த கல்மழை போலச் சிதறியோடின. அதனையறிந்த சூரபன்மன் முருகனது தோல் மீது இரண்டாயிரம் அம்புகளை எய்தான். அவை வெந்தொழிந்தன. அவன் மாயமாய் விண்ணில் மறைந்தான். மண்ணில் வந்தான். முருகனும் அவ்வாறே அங்கங்குச் சென்று எதிர்த்தார். நன்னீர்க் கடலிற் சென்றான். அங்கும் சென்றார். மேருமலை, வைகுந்தம், அண்டகோளகை முதலிய இடங்களுக்கும் சென்றான். முருகனும் அங்கங்குச் சென்று பொருதார். சிவகணைகளை ஏவி அவன் ஏறியிருந்த பொற்றேரை அழித்தார்.

சூரபன்மன் இந்திரஞாலத் தேரை அழைத்து அதன் மேலேறிப் பொருதான். அப்போது அண்ட வாயில் அடைப்பட்டிருப்பதையும், அதனால் தன் படைகள் வாரா திருப்பதையும் கண்ட சூரபன்மன் சில கணைகளால் அண்ட வாயிலைத் திறந்தான். படைகள் அவன் பக்கத்தில் வந்து குவிந்தன. முருகன் தீக்கண்ணை விழித்து நோக்கினார். அப்படைகள் சாம்பராயின.

பல அண்டங்களிலிருந்து அவுண சேனைகள் வந்து முருகனைத் தாக்கின. முருகன் தமது திருக்கரத்தில் உள்ள கதை, கட்கம், சூலம் முதலிய படைகளை நோக்கி "நீங்கள் சென்று எங்கெல்லாம் அவுணச் சேனைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அவைகளை அழித்து வாருங்கள்" என்று ஏவினார். அங்ஙனமே ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் சென்று அழித்து உலவின.

இதனை அறிந்த சூரபன்மன் முருகன் மீது சக்கரப் படையை ஏவினான். முருகப் பெருமான் ஒரு கரத்தை நீட்டி "வா" என்று பற்றினார். சூரபன்மன் மனங் கலங்கிப் பல வடிவங்கொண்டு தேரின் மீதிருந்து கணை மழைகளைப் பொழிந்தான். முருகக் கடவுள் புன்முறுவல் பூத்து ஞானாஸ் திரத்தை விட்டார். அது அவன் மாயங்களை அழித்தது. சூரபன்மன் வலி யொடுங்கித் தேரின் மீது தனித்து நின்றான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

இதனைக் கண்டு பொறுக்கமாட்டாத அவுணர் கோன் அண்டபித்திகையின் வாயிலை அடைத்து அறை கூவினான். முருகனும் அங்குச் சென்றார். பிருதிவி அண்டம் முழுவதும் சென்றான். முருகனும் அங்கங்குச் சென்று பொருதார். அவுண சேனைகள் அறுமுகக் கடவுளைச் சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தன. முருகன் புன்முறுவல் பூத்தார். அவை வெந்து சாம்பராயின.

மனம் உடைந்த சூரபன்மன் தன் தாயாகிய மாயையை எண்ணினான். மாயையும் வந்தாள். அவளிடம் தமது குறைகளை யெல்லாம் கூறி, "இறந்தவர் அனைவரும் எழ ஒரு வழி கூறுக" என வேண்டினான். மாயை "மைந்தா! இந்நிலையெய்தியும் தேவரை விட நீ விரும்பவில்லை.பன்னிரு கரத்து அறுமுகக் கடவுளோடு மேலும் சண்டை செய்ய விரும்புவாயாயின் உன் செல்வமெல்லாம் தொலையப்பெற்ருய்; அவரைப் பாலனென்று எண்ணாதே; அவர் கரத்திலுள்ள ஞானசக்தி உன்னைக் கொல்லப்போகிறது; இன்று நான் சொல்வது காதில் ஏறாது. உன் விருப்பம்போல் இறந்தவர்கள் எழும்ப வேண்டுமானால் பெரும்புறக் கடலின் அருகில் அமுத சீத மந்தர கூடம் என்ற ஒரு மலை இருக்கிறது. அதனைக் கொணர்ந்தால் அனைவரும் எழுவர்" என்று கூறி மறைந்தாள். சூரபன்மன் மகிழ்ந்து தேரிலிருந்தும் இறங்கி சிங்க வாகனத்தில் ஏறிக்கொண்டு, இந்திரமாஞாலத் தேரை நோக்கி "நீ சென்று அம்மலையைக் கொணர்க" எனப் பணித்தான். அது அங்ஙனமே சென்று கொணர்ந்தது. அனைவரும் உயிர் பெற்றெழுந்தனர். சிங்கமுகன் முதலியோர் மீண்டும் அறுமுகப் பண்ணவனை வளைத்துப் போரிட வந்தனர். முருகன் புன் முறுவல் பூத்து உருத்திர பாசு பதத்தை ஏவி அனைவரையும் அழைத்தார்.

சூரபன்மன் இந்திரமாஞாலத் தேரை நோக்கி நீ வீரவாகு தேவர் முதலிய வீரர்களையும், பூதச் சேனைகளையும், தலைவர்களையும் வாரிக்கொண்டுபோய் அண்டத்துச்சியிலே வைத்துக் கொண்டிருப்பாயாக' என ஆணை தந்தான். அதுவும் அவ்வண்ணமே செய்தது. முருகன் ஒரு கணையை ஏவி, 'நீ அதன் ஆற்றலை யழித்து இங்கே கொணர்க, என, அந்தக் கணையும் அவ்வாறே செய்து திருமுன் கொணர்ந்தது வீரவாகுதேவர் முதலியோர் முருகனை வணங்கி அவர் பக்கலை யடைந்தனர். இந்திர மாஞாலத் தேர் மீண்டும் சூரபன்மன் பக்கம் செல்ல எழுந்தது. முருகன், "அவன் அழிவது உறுதி; அங்கே போகாதே; இங்கேயே நில்" என்று அதட்டினார். அது அவ்வண்ணமே நின்றுவிட்டது.

இது கண்ட சூரபன்மன் பெருங்கோபங்கொண்டு கணைப் போர் புரிந்தான். முருகனும் ஆயிரங் கணைகளை அனுப்பி அவன் வில்லைத் துணித்தார். சூரன் முத்தலைச் சூலத்தை ஏவினான். அதனையும் முருகன் ஆயிரங்கோடி கணைகளால் பயனற்றொழியச் செய்து குலிசப் படையை ஏவி அதனைப் பிடித்து வரச் செய்தார். சூலம் வலியொடுங்கி முருகன் கரத்திலிருந்தது. முருகன் இரண்டாயிரம் கணைகளை ஏவி அவன் ஏறியிருந்த சிங்கத்தைக் கொன்றார்.

சூரபன்மன் மாயா வாதத்தால் சக்கரவாளப் பறவையாக மாறி ஆகாயத்தில் பறந்து திரிந்து போர் செய்தான். இந்திரன் ஒரு மயிலாக வடிவெடுத்து முருகனுக்கு வாகன மாயினன். முருகன் அதன்மீது ஏறி ஆகாயத்தில் சென்று சண்டையிட்டார். சக்கரவாளப் பறவையாகிய சூரபன்மன் முருகனுடைய வில்லைக் கடித்துத் துணிக்க வந்தான். முருகப் பெருமான் ஞான வாளால் அவனை வெட்டினார். அவனுடைய பறவை வடிவம் மாய்ந்தது.

சூரபன்மன் விசுவரூபம் எடுத்துக் கடல்களைத்தூர்த்தான். கதிர்கள் வரும் வரிகளை அடைத்தான். முருகன் ஏழு கணைகளால் அவன் செய்யும் மானத்தை அழித்தார். நீருரு எடுத்தான். தீயுரு எடுத்தான். புயல் வடிவானான். எல்லாவற்றையும் இறைவன் கணைகளே சென்று அழித்தன. சூரபன்மன் பல தேவவடிவங் கொண்டு பொருதான். அவற்றையும் அம்பாலேயே அழித்தார். சூரபன்மன் போர்க் களத்திலே தனித்து நின்றான். முருகக் கடவுள் உலகெலாம் தானாய் நிற்கும் உயர் பெரு வடிவங்கொண்டு **அருள்மிகு சிங்காரவேலவராய் நின்றார். அந்த இடம் இச் சிக்கல் தல** **மென உய்த்துணரக் கிடக்கின்றது.**

சூரபன்மன் சிங்காரவேலவனை வியந்து நோக்க, முருகன் அவனுக்குச் சிறிது நல் உணர்ச்சியை நல்கினார். சூரபன்மன் நிமிர்ந்து பார்த்தான். இதுகாறும் அத்தகைய திருவுரு வத்தைக் கண்டதில்லை.ஆயிரமாயிரம் கதிர்களைவீசிப் பரப்பு



திருக்கல்யாண மண்டபத்தின் உட்புறத்தோற்றம்



தங்க மஞ்சம்

தங்க ஆட்டுக்கிடா வாகனம்

வெள்ளி ரிடப வாகனம்

கின்ற தேசுத் திருவுருவம் தன் முன்னே நிற்பதைப் பார்த்தான். ஒருவனுக்கு அடிபணிந்து வளையவும் வியந்து அண்ணாந்து பார்க்கவும் அவனுக்குத் தெரியாது. நின்றால் நின்றபடியே பார்க்கும் தகைமையன். இப்போது மிகமிக உயரமாக இருக்கிற முருகப்பெருமானின் திருவுருவத்தை அண்ணாந்து பார்த்தான். பார்க்கும்போது இதுகாறும் இத்தகைய பேருருவத்தைக் கண்டிலோமே என்ற வியப்பு உண்டாகியது. "யாரோ சிறிய குழந்தை ஒரு மயிற்குஞ்சின் மீது ஏறி வருகிறதென்று அல்லவா நினைத்தேன்? இவ்வளவு பெரிய அழகுத் திருவுருவத்தை உடையவன் முருகன் என்பதை இந்நாள் வரை நினைத்திலேனே!" என்று எண்ணி ஏங்குகிறான்.

"கோலமா மஞ்ஞைமீதிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை யுணர்ந்திலேன்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ"

என்று வியப்பு அடைகிறான். இது முதற் தோற்றத்தில் உண்டான வியப்பு. தான் சிறுவன் என்று கருதிய திரு வுருவம் எல்லாப் பொருளுக்கும் மூலகாரணமாக இருக்கிற மூர்த்தியாகத் தோற்றியவுடன் தோற்றிய வியப்பு.

அதற்குப் பின்னர் அவன் தன்னுடைய கண்ணால் அப் பெருமானது ரூபா லாவண்யத்தை நுகரப் போகிறான். மெல்ல ஒவ்வோர் உறுப்பாக அவன் கண் உலவுகிறது. எல்லை கட்டிக் காணவொண்ணாத பரப்பும் எல்லை கட்டிச் சொல்ல முடியாத அழகும் உடைய அந்தத் திருவுருவத்தின் திருவடி முதல் திருமுடி வரையில் தன் கண்ணை ஓச்சுகிறான். பக்கத்தில் ஓட்டுகிறுன். திருக்கரங்களின் முடிவுகாணவில்லை. திருமேனியின் எல்லை காணவில்லை. அழகை அனுபவித்து முழுமையும் காணமுடியவில்லை. இந்த நிலையில் எம்பெருமா னுடைய திருவழகில் ஈடுபடுகிறான். "உலகம் அறியாமையால்

காமனைப் பேரழகன் என்று சொல்கிறது. அழகுக்குத் தலை எல்லை மன்மதன் என்று மயங்கிச் சொல்கிறார்களே! அந்த மன்மதன் எம்பெருமானுக்கு முன்னால் நிற்க முடியுமா? எம்பெருமானுடைய திருவுருவம் முழுமையிலும் உள்ள அழகு கிடக்கட்டும்; அவன் திருவடியின் கண்ணே உள்ள அழகின் ஒரு பகுதிக்காவது ஆயிரம்கோடி மன்மதன்களுடைய அழகு எல்லாம் ஒன்ருகச் சேர்த்து உருவம் எடுத்தாலும் ஒப்பாகுமா?'' என்று ஈடுபட்டு அந்த அழகை வியக்கிறான்.

''ஆயிரம் கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில்
தூயஇவ் வெழிலுக் காற்றாதென்றிடின் இனையதொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமை யார் வகுக்க வல்லார்''

— கந்தபுராணம்

முருகனை இவ்வகையில் பலவாறு போற்றிப் புகழ்ந்தான். உண்மை ஞானம் சிறிது கைவரப் பெற்றான். அதனால் ''என்றும் மீளா ஆளாகவே யிருக்க எனக்கு ஆசை; ஆனால் என் மானம் என்னைத் தடுக்கிறது. என் செய்வேன்'' என்று பலவாறு தோத்தரித்துத் தன் குற்றத்தை உணர்ந்து வருந்தினான். அப்போது முருகன் மீட்டும் மயில் வாகனத்தின் மீது பண்டைய பாலக உருவில் காட்சியளித்தார். சூரபன்மனும் முன்போல அறியாமை மிக்கவனாகி மாயை மந்திர வலியால் கதிரவனும் ஒளி மழுங்கும் பேரிருள் வடிவாக வானிற் கிளம்பித் தேவர்களை வருத்தினான். தேவர்கள் ''தேவர்கள் தேவே! ஓலம், மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே! ஓலம், ஓலம்'' என்று ஓலமிட்டனர். முருகன் **தமது அன்னையாம் சிக்கல் வேனெடுங்கண்ணியிடம் சக்தி வேற் படையினைப் பெற்றார்.** (இன்றும் வேனெடுங்கண்ணியிடம் வேல் வாங்கும் ஐதீகக் காட்சி நடைபெறுகிறது. வேல் வாங்கிய பின் அருள்மிகு சிங்கார வேலவன் மீது வியர்வைத் துளிகள் காணப்படும்) **சிக்கல் அருள்மிகு சிங்காரவேலவர்** ஆகி நிற்கும் முருகன் தமது திருக்கரத்திலுள்ள சக்தி வேற் படையை நோக்கி ''சூரன் மார்பைப் பிளந்து விரைவில்

மீளுதி'' என்று ஏவினார். அவ்வேல் சென்று அவன்கொண்ட இருள் வடிவத்தை அழித்தது. சினங்கொண்ட சூரபன்மன் கடல் நடுவில் ஒரு பெரிய மாமரமானான். வேற்படை அங்கும் சென்று மாமரமாக இருந்த அவனை வெட்டி வீழ்த்தியது. மீண்டும் எழுந்து சூரபன்மன் வாட்போர் செய்ய வந்தான்.

வேற்படை அவன் மார்பைப் பிளந்து உடலை இரு துண்டாக்கிக் கடலில் தள்ளியது. தேவகங்கையில் மூழ்கித் தேவதேவன் திருக்கரத்தை அடைந்தது.

சூரபன்மன் அழியா வரம் பெற்றவன் ஆதலின் மீண்டும் எழுந்தான். போர்ச் செருக்குக் கொண்டான். கோழியும் மயிலும் ஆனான். முருகன் முன்பு வந்தான். அருள்மிகு சிங்காரவேலவர் ஞான நோக்கருளினார். பரிசவேதியால் இரும்பு பொன்னானது போல அருள்மிகு சிங்காரவேலவனின் பார்வையால் சூரன் பகைமை நீங்கி நல்லறிவு பெற்றான். கொடியாகவும் ஊர்தியாகவும் இருக்க அருள் வேண்டினான். அருள்மிகு சிங்காரவேலவரும் அவ்வாறே நல்லருள் புரிந்தார்.

கோழியைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் கொண்டார். தேவர்கள் ஆரவாரம் செய்தனர். தோத்திரம் செய்தனர். போர்க்களத்திலேயே **அருள்மிகு சிங்காரவேலவர்** அனைவருக்கும் அருள் வழங்கினார்.

கோல வாமனப் பெருமாள் பேறு பெற்றது

அருள்மிகு வைகுந்த வாசம் செய்யும் திருமால் திருவடிகளில் வீழ்ந்து, தேவர்கள் மண்ணுலகில் இருந்து பேரரசு செலுத்திவரும் மகாபலிச் சக்ரவர்த்தியால் படும் தொல்லைகளை விண்ணப்பித்தனர். அவர்கள் இடையூற்றினைப் போக்கியருளுதற்காக வாமனாவதாரத் திருக் கோலத்தினைத் திருமால் பூண்டு, சிக்கலாகிய இத்தலம்

சார்ந்து, கயா தீர்த்தத்தினை உண்டாக்கினார். அந்தத் தீர்த்தத்தில் நாடோறும் நீராடி, திருவெண்ணீரணிந்து உருத்திராக்க வடம்பூண்டு திருவைந்தெழுத்தோதி மகாபலிச் சக்ரவர்த்தியினை அழிக்கும் பேராற்றல் பெறவேண்டுமெனச் சங்கற்பம் செய்துகொண்டு, தேவர்கள் வேண்டும் உப கரணங்களை எடுத்தன்போடும் கொடுக்கச் செறிந்த பேரன்பி னோடும் **அருள்மிகு நவநீதேசுவரரை** முறைப்படி வழுவாமற் பூசனை செய்து வரலானார். எம்பெருமான் அவர் முன்னே தோன்றி திருமால் வேண்டியவாறு மகாபலியை அழிக்கும் பேராற்றலை நல்கியருளினார். அருள்மிகு கோலவாமனப் பெருமாள் அவ்வாற்றலினால் மகாபலியை அழித்து, அனைவருக்கும் நல்லருள் பாலித்தார். (திருமால் திருக் கோயில் சிக்கல் ஆலயத்துள்ளே அணிபெற விளங்குகின்றது) **அருள்மிகு கோலவாமனப் பெருமாள்** என்ற திருப்பெயர் தாங்கி அன்பர்கட்குத் திவ்ய சேவை சாதிக்கிறார்.

ஆஞ்சநேயர்

இத்திருக்கோயிலின் வடமேற்கு மூலையில் அருள் வழங்கும் வரத ஆஞ்சநேயர் தனி சந்நிதி கொண்டு வேண்டு வோருக்கு வேண்டிய வரங்களை வழங்கி அருள்பாலித்து வருகிறார். காரியசித்தி பெற கட்டு அமுது கட்டி வழிபாடு செய்தல் தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

காமதேனு சாபம் நீங்கப்பெற்றது

''விண்டு இரைத்த மலராற்றிகழ் வெண்ணெய்ப் பிரான்''

— *திருஞானசம்பந்தர்*

முன்னொரு காலத்தில் பன்னிரண்டு வருடங்கள் வரை மழையில்லாமல் எங்கும் உயிர்களெல்லாம் வருந்த நேரிட்டது. **''விசும்பில் துளி வீழின் அல்லால் மற்றாங்கே பசும்புல் தலை காண்பதரிது''** என்னும் வள்ளுவர் பெருமான் வாய்மொழிக்

கிணங்க புல்லும் அகப்படவில்லை. காமதேனுப் பசு பசியால் வாடி வருந்தி, எங்கும் அலைந்து திரிந்து இறந்து கிடந்த நாயின் இறைச்சியைத் தின்று உயிர்தாங்கிற்று. சிவபெருமான் காமதேனுவைப் பார்த்து "நீ நாயின் ஊனைத் தின்றதால் புலிமுகம் பெற்றுத் திரிக" என்று சபித்தார். காமதேனு கவலைப்பட்டு, இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிச் சாபம் நீங்கும்படிப் பிரார்த்தனை புரிந்தது. சிவபெருமான் மனமிரங்கி காமதேனுவிடம் "சோழநாட்டில் சிறந்த தலமாக விளங்கும் மல்லிகாரண்யத்திற்குச் சென்று அமிர்ததடாகத்தில் நீராடி எம்மைப் பூசித்தால் புலிமுகம் நீங்கும் என்றார். காமதேனு அவ்வண்ணமே இத்தலம் சார்ந்து அமிர்த தடாகத்தில் நீராடி இறைவனை வழிபட்டது. நித்தலும் நியமம் செய்து சிவபெருமானைப் புனல் மலராதி கொண்டு வழிபடவே புலி முகம் நீங்கித் தன் சுய வடிவம் பெற்றது. வழிபாட்டின் வந்த பேரின்பத்தினால் பால் மடியிலிருந்து பெருகியது. பாற்குளம் ஆயிற்று. வடமொழியில் **க்ஷீரபுஷ்கரணி** என்னும் தீர்த்தமாக அமைவதாயிற்று. இத்தலத்தை தரிசிக்க வரும் மெய்யன்பர்கள் இப்புனித தடாகத்தில் நீராடி, திருக்கோயிலை வலம்வந்து, அருள்மிகு நவநீதேசுவரரையும், அருள்மிகு சிங்காரவேலவரையும் வழிபட்டுவரின் எண்ணில் சித்திகளைப்பெறுவர்.

வசிட்ட முனிவர் வழிபட்டது

கயிலை நாயகனின் திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் வசிட்ட முனிவர் மண்ணுலகம் சார்ந்து **சிக்கல்** என்னும் இத்தலம் போந்து, ஆசிரமம் அமைத்து, மல்லிகை வனத்தில் தங்கி, எம்மிறையை நாடோறும் வழிபட்டு வரலானார். "அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்றைம் புலனும் அடக்கி ஞானப் புகலுடையோர் தம் உள்ளப் புண்டரீகத் துள்ளிருக்கும் புராணர் கோயில்" (திருஞானப் பண், மேக ராகக் குறிஞ்சி) என்ற சிரபுரச் செல்வரின் திருவாக்குப்படி ஐம்புலன்களின் வழியே அறிவு புறத்திற் செல்லாதடக்கி

நிறுத்தி பகை ஆறினையும் நீக்கி, விரும்பப்படுந் திருநீற்றுக் கோலத்தை உருத்திராக்க மாலையோடும் விரும்பிப் பூண்டு மனஞ்சலியாது சீருத்தரத்தை ஒரு வழிப்பட்டெண்ணி இருதய மாகிய நற்றாமரை மலரில் எமது பெருமானது திருவருள் வடிவை நிலைபெறச்செய்து மெய்த்தவம் இயற்றினார் வசிட்ட முனிவர். அந்நாளில் பாற்குளத்தில் உண்டான வெண்ணெயைச் சிவலிங்கமாக்கி ஆன்மார்த்தமாக வழிபட்டார். இச்சிவலிங்கத்தினை உருத்திரகோடி பீடமென வழங்குவர். சிவபெருமான் வசிட்டர் முன்னே தோன்றினார். வசிட்டர் எம்மிறையைக் கண்டு பேரானந்தமடைந்தார். சிவ பெருமான் "நீ வேண்டும் வரத்தைக் கேள்" என்றார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற திருமந்திர மொழிக்கிணங்க வசிட்டர் "இச்சிவலிங்கத்திலேயே எப்போதும் எழுந்தருளி எல்லோர்க்கும் இம்மை மறுமைப் பயன்களை அருளல் வேண்டும்" என விண்ணப்பித்தார். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ற அப்பர் வாய்மைக் கிணங்க சிவபெருமானும் வசிட்டர் விரும்பிய வண்ணமே விளங்கி வருவாராயினர். திருவருட் குறிப்பை யுணராது, வசிட்டர் வழிபட்டு வருங்கால், அச் சிவலிங்கத்தினை வேறிடத்தில் அமைக்க முயன்றார். எடுக்க வராமல் அவ்விடத்திலேயே சிக்கிக்கொண்டு அவ்விலிங்கம் அமர்ந்ததால் "**சிக்கல்**" என்ற பெயர் வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

வசிட்டர் வசித்து வந்ததால் இத்தலம் வசிட்டாச்சிரமம் என்றும் சொல்லப்படுகின்றது. வசிட்ட முனிவரும் இவ்வாறு திருவருள் பெற்றுய்ந்தனர்.

விசுவாமித்திர முனிவர் வழிபட்டது

விசுவாமித்திரர் மிகப்பெரும் புண்ணிய சீலர். அஷ்டாங்க யோகம், பக்தி யோகம், கர்ம யோகம், இராஜ யோகம் முதலிய யோக நெறியில் அக வழிபாடு செய்து நீடு தவம்

செய்தருளினார். பெருந் தவமியற்றினார். தேவர்களும் அவரது தவத்தைக் கலைக்க ஊர்வசி முதலானவர்களை அனுப்பினர். விசுவாமித்திரர்,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

— *திருமூலர்.*

திருவாக்கின் வண்ணம் உத்தமனாகிய இறைவனடியே சிந்தித்திருந்தார். விசுவாமித்திரர் திலோத்தமையைக் கண்டு கூடியதால் பெறுதற்கரிய தவத்தினை இழந்தார். மன அமைதி பெற முடியாமல் வருந்தியபோது வாமதேவ முனிவர் செய்தருளிய உபதேசப்படி, சிக்கலாகிய இத்தலத்திற்கு வந்து பாற்குளத்தில் நீராடி நவநீதப் பெருமானை வழிபட்டார்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி விசுவாமித்திரர் மனக் கவலை நீங்கப் பெற்றார். மன அமைதியுற்றார். பாற் குளக் கரையில் ஓர் அரச மரம் வைத்து, அதனடியில் தவஞ்செய்து பேறு பெற்றார். அரச மரம் தலத் திருமரமாக விளங்குகிறது. இவ்வாறே அகத்தியர், காத்தியாயனர், நாரதர் முதலிய முனிவர்களும் தமது பாவங்கள் நீங்கவும், தவம் பெருகவும், மனம் ஒருமைப்படவும் சிக்கல் தலத்துக்குப் போந்து பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றார்கள்.

திருடன் முதலிய மூவர் வழிபட்டது

திருடன் ஒருவன்; பெருநோய் கொண்ட மற்றொருவன்; பல்லும், நகமும் போன மற்றொருவன் ஆகிய மூவரும் ஆற்றொணாத் துயரம் அடைந்தனர். அல்லற்பட்டனர் அம் மூவரும்.

''நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்''

என்ற வள்ளுவர் வாய்மையினை யுணர்ந்த வண்ணம் அக் காலத்தில் அங்கு வாழ்ந்த வசிட்ட முனிவரை அடைந்து, தங்களுக்குற்ற பிணிகளும், நோய்களும் நீங்க அருள் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டினார்கள். வசிட்டர் அவர்களை நோக்கி ''நீங்கள் பாற்குளத்தில் நீராடி நவநீதப் பெருமானை வழிபட்டு வந்தால் நோய்கள் நீங்கும்'' என்று உபதேசித்தார். அவர்கள் மூவரும் அவ்வாறே இத்தலத்துக்கு வந்து, பாற்குளத்தில் நீராடி, நவநீதப் பெருமானை மன மொழி மெய்களால் வழிபட்டு வர பற்றிய பாவங்கள் யாவும் சிதைந்தொழிந்து நீங்கின. பழவினை தீர்ந்தது. நோய்களும் விலகின. இறுதியில் முத்தி இன்பத்தையும் பெற்றார்கள். நவநீதப் பெருமானை வணங்கினால் பிணிகள் நீங்கும் என்பதைத் திருஞானசம்பந்தர் பின் வருமாறு தமது திருப் பாடலில் கூறியருளுகிறார்.

''சிட்டன் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் செழுமாமறை
பட்டன் சேவடியே பணிமின் பிணி போகவே''

முசுகுந்தச் சக்கரவர்த்தி வழிபட்டுப் பேறு பெற்றது

முன்னொரு காலத்தில் முசுகுந்தன் என்னும் பேரரசன் அயோத்தியில் ஆண்டு வந்தான். சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலோடு மணங் கமழ்ந்து பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையோடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமுந் முருக்கொடு முகை சிறந்து,வண்டறைந்து,தேனார்ந்து,வரிக்குயில்களிசை பாட தண் தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு

செய்யும் பொழில் ஒன்றில், ஒரு சமயம் குதிரை மேல் ஏறி முசுகுந்தப் பேரரசன் வேட்டையாடச் சென்றான். அரசன் ஏறி வந்த குதிரையின் குளம்பு தாக்கி ஓர் வயோதிக அந்தணன் இறந்து போனான். அரசன் அச்செயல் நிகழ்ந்ததை அறிய வில்லையாயினும், அவ்வந்தணனைக் கொலை செய்த மாபாவம் அவனைப் பிடித்துக்கொண்டது. அரசன் மனம் மிக வருந்தினான். அமைச்சர்களிடம் இப்பாவம் நீங்கும் கழுவாய் களைக் கேட்டான். அவர்கள் கூறிய வண்ணம் அரசன் பல தான தருமங்களைச் செய்தான். சிவ ஸ்தல யாத்திரை மேற் கொண்டு பல சிவத் தலங்கள் சென்று வழிபட்டான். ஆங்காங்கே உள்ள தீர்த்தங்களில் நீராடினான். அப்பாவம் அவனை விட்டு நீங்கினபாடில்லை. திருவருள் துணை செய்த வண்ணம், தனது குல குருவான வசிட்ட முனிவரிடம் வந்தடி பணிந்து நின்று பாவம் நீங்கும் வகையைக் கேட்டான். அம்முனிவர் பெருமான் அருளாணைக் கிணங்க அரசன் சிக்கல் தலத்தை அடைந்து பாற்குளத்தில் நீராடி, அருள்மிகு நவநீதப் பெருமானை சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யம்மான் றன்னைப் பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துப் பன்னாள் அழைத்து, பத்திமையால் பணிந்து வழிபட்டு வந்தான். பாவம் நீங்கி நற்பேறு பெற்றான்.

> **''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
> **திண்ணிய ராகப் பெறின்''**

என்ற திருக்குறட் பாவின் கருத்தினையும் ஓர்க!

மனம் மகிழ்ச்சியுற்ற மன்னர் மன்னன் முசுகுந்தன் அருள்மிகு நவநீதேசுவரர்க்குத் திருக்கோயில் கட்டுவித்து மண்டபங்கள், கோபுரங்கள், திருச்சுற்று மதில்கள் முதலிய வற்றையும் உடன் அமையச் செய்து திருப்பணிகள் பற்பல செய்வித்தான். திருச்சிக்கல் தலத்தை அளகாபுரி போலும் அழகாக எடுப்பித்தான். ஆடல் வல்ல மூர்த்தியைப் பிரதிட்டை செய்து பேரின்ப முற்றான். சித்திரைப் பெருந்

திருவிழாவினை நடத்தினான், திருத்தேர் விழாவினையும் கொண்டாடினான். இறுதியில் யாவரும் நண்ணரிய சிவானந்த முக்தியும் பெற்றான்.

தேவர்கோவறியாத தேவ தேவனை சிவலோக நாயகனான, அருள்மிகு நவநீதேசுவரரை, இந்திரன் முதலான தேவரும், முனிவர் பெருமக்கள் பலரும், கந்தருவர்களும், இயக்கர்கள் அறுபத்து நால்வரும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு நவநீதேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்றுய்ந்தனர்.

திருப்பணிகள்

பழங்காலத்தில் முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப் பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதை பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். "புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழைய தொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிகப் புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

ஆதியில் இக்கோயில் முசுகுந்தச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதாகப் புராணத்தின் வாயிலாக அறியப்படுகிறது. அருள்மிகு நவநீதேசுவரர் எழுந்தருளியிருக்கும் கோயில் கட்டுமலை-மாடக்கோயில். இது கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்றது.

கோச்செங்கட் சோழன், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பல கோயில்களை மாடக்கோயில்களாக யானை ஏறாத கோயில்களாக அமைத்தான். அவை 'யானை ஏறாக் கோயில்கள்' என்று வழங்கப்படும். அவைகளில் நேர் வாயில் அமையாமல் பக்கத்தே அமைந்திருக்கும்.

''எண்டோளீசர்க்கு எழில் மாடம் எழுபது செய்து உலகாண்ட திருக்குலத்து வளச்சோழன்''

என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். திருக்கீழ்வேளூர், அம்பர், ஆலூர் போன்ற தலங்களில் இத்தலத்தே காண்பது போல் மாடக்கோயில் காணலாம். உட்கோயில் கருங்கல் திருப்பணி. மண்டபங்கள், கோபுரங்கள் முதலியன பிற் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டன. திருமதில்கள் செங்கல்லால் ஆனவையாம்.

அண்மை திருப்பணி

தென்னாட்டில் தேவாரப் பாடல் பெற்ற பழைய ஆலயங்களைத் தனவணிக மக்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும் பொருட் செலவில் திருப்பணி செய்து புதுப்பித்தும், ஆங்காங்கு புதிய கோயில்களை அமைத்தும் தெய்வ பக்தியினை வளர்த்து வரலானார்கள். அம்மரபினில் சிவ நெறியினில் வழிவழியாக வந்த இராமநாதபுரம் மாவட்டம் ஆத்திக்காடு தெற்கூர், திரு. **கருமுத்து அழகப்ப செட்டியார்** அவர்கள். 1899-ம் ஆண்டு முதல் சுமார் 35 ஆண்டுகள் வரையில் இக்கோயில் அறங்காவலராகத் திகழ்ந்தார்கள்.

வெண்ணெய்ப் பெருமானது அருட்டுணையால் திருவருள் தூண்ட இக்கோயிலின் திருப்பணியைத் தொடங்கினார்கள். மண்டபங்கள், கோபுரங்கள் விமானங்கள் முதலியவைகளைப் புதுப்பித்தும், திருக்கோயிலுக்கு முன்னால் இதுகாறும் தமிழகம் கண்டிராத வகையில் நிலைபேறுள்ளதாய் திருக் கல்யாண மண்டபம் **(காரனேஷன் ஹால்)** அமைத்தும் மற்றும் திருவாபரணங்கள், தங்க வாகனங்கள், கவசங்கள் முதலியன செய்வித்தும் திருவாளர் கருமுத்து அழகப்ப செட்டியார் அவர்கள் மிக்க சிவ புண்ணியத்தினைச் செய்தருளிய பெருந்திருவினராய்த் திகழ்ந்து இறைபணியில்

நின்றனர். சுமார் 8 லட்ச ரூபாய் செலவு செய்து (திருப்பணி செலவினங்கள் உள்பட) 5—6—1933-ல் மகா கும்பாபிஷேகத்தையும் செய்வித்தனர்.

திருவாபரணங்களில் முக்கியமானவை

1. அருள்மிகு சிங்கார வேலவர் பொற்கவசம்.

2. பன்னிறக் கற்களால் இழைத்த சாயற் கொண்டைக் கிரீடம்.

3. (இரங்கூன்) வைர வேல்.
இவை மிக அழகு வாய்ந்தவை.

4. வெள்ளி வேலை செய்த குடை.

5. கொடி, ஆலவட்டம் முதலிய எடுபிடிகள். (வெள்ளியில்)

6. பதினாறு வகையான (சோடச) உபசாரப் பொருள்கள் (வெள்ளியில்) முதலியன உள்ளன.

7. பூலாங்குறிச்சி திரு. வ. செ. ராமனாதன் செட்டியார் அவர்களால் அமைக்கப்பட்ட பொற்கவசம் ஒன்றும் வேலவர்க்கென உள்ளது.

8. ஆலயத்திலிருந்து ரூ. 1 லட்சம் செலவில் வெள்ளித் தேர் ஒன்று செப்பனிடப்பட்டு கோவில் முதல் சுற்றின் தென்கிழக்கில் தனி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருமண விழாவன்று மின்னொளி அழகுடன் கூடிய அத்தேரில் வீதிவலம் வந்தருளுவார்.

கோயிலின் அமைப்பு

நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. கோயிலைச் சுற்றிலும் வண்டு பாடும் சோலைகளும் வாவிகளும் சூழ்ந்திருக்கும், ''**செந்தண் பூம்பொழிற் சிக்கல்**'' என்று காட்டுகிறார் சம்பந்தர். கோயிலுக்கு முன்புறமுள்ள மதிலில் பல நிறங்கள் தீட்டி விளங்கும் 80 அடி உயரமுள்ள எழுநிலை மாடக் கோபுரமும், மூன்று நிலை மாடக் கோபுரமும் வருகின்றவர்களை வாவென் றழைப்பது போல் விளங்குகின்றன. பெரிய கோபுரம் சிவன் கோவிலுக்கும், சிறிய கோபுரம் பெருமாள் கோவிலுக்கும் அங்கமாக – வாயிலாக விளங்குகின்றன. கோபுரத்துக்குள்ளே நுழைந்தால் கார்த்திகை மண்டபம் உள்ளது. வசந்த மண்டபம் என்றும் சொல்லப்படும். கார்த்திகை நாட்களில் சிங்கார வேலவர் இம்மண்டபத்துக்கு எழுந்தருளிக் காட்சி தருவார். இம்மண்டபத்தின் தென்புரத்தில் நிலைக்கண்ணாடி உள்ளது. முருகன் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது வழிபடும் அடியவர்களுக்கு முன்னும் பின்னும், புறத்தும் அகத்தும் முருகன் காட்சியளிப்பதைக் கண்ணாடி காட்டும். அது நூல்களாகிய கண்ணாடியின் மூலம் பெருமானைக் காண வேண்டும் என்பதை உணர்த்தும். இம்மண்டபத்தின் மேலிடங்களில் கந்தபுராண வரலாறுகள் — கந்தன் திரு விளையாடல்கள், முருகன் அவதாரம் முதல் கல்யாணம் வரையில் பல வண்ணங்களில் ஓவியங்களாக வரையப் பெற்றுள்ளன.

இம்மண்டபத்தை அடுத்து ஓர் வாயில் உள்ளது. தென் புறத்தில் விநாயகரும் வடபுறத்தில் தண்டபாணியும் தனித் தனியே கோயில் கொண்டுள்ளார்கள். வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் கொடிமரம் (துவஜ ஸ்தம்பம்) உள்ளது. இவ்விடத்தைச் சுற்றிலும் ஓர் பிரகாரம்-முதற்சுற்று உள்ளது. இதன் தென் புறத்தில் இரும்புக் கதவுகள் பொருந்திய ஊர்தி (வாகன) அறைகளில் சிங்கார வேலவருக்கென்று ஏற்பட்ட

தங்கத்தாலான மயில், குதிரை, ஆட்டுக்கிடா முதலிய ஊர்திகள் (வாகனங்கள்) உள்ளன. இதை அடுத்து அறுபத்து மூவர் மண்டபம் உள்ளது. மேல்புறத்தில் காசிவிஸ்வநாதர் விசாலாட்சி சந்நிதியும், கார்த்திகை விநாயகர் சந்நிதியும் உள்ளன. கார்த்திகைப் பெண்கள் அறுவரும் முருகனுடைய வளர்ச்சி குறித்து வழிபாடு செய்து வந்ததால் கார்த்திகை விநாயகர் எனப் பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலக்கோடியில் சிற்பத் திறனும் கலையழகும் பொருந்திய ஆறுமுகக் கடவுள் குமாரசாமி மயில் ஊர்தியில் எழுந்தருளி யிருக்கிறார். இவர் கோயில் தனிக் கோயிலாக விளங்குகிறது. வடபுறத்தில் திருமகள், சண்டேசுவரர், முதலியவர்களின் சந்நிதிகளும் கிணறும் உள்ளன.

நடுவில் மூலவர் எழுந்தருளியிருக்கும் இடம் கட்டு மலை மாடக்கோயில் கோச்செங்கட் சோழன் கட்டுவித்ததாகச் சொல்லப்படுகிறது. இம்மலையின் தென்புறத்தில் சனீஸ்வரர் சந்நிதியும், வசிட்டர் முதலிய ஏழு முனிவர்களின் சந்நிதியும், மல்லிகை மரமும், தட்சிணாமூர்த்தியின் சந்நிதிகளும், வடக்கில் துர்க்கை முதலியோரின் சந்நிதிகளும் உள்ளன. கட்டுமலைக்குப் பன்னிரண்டு படிகள் ஏறிச் செல்ல வேண்டும். படிகளுக்குப் பக்கத்தில் சுந்தர கணபதியின் சந்நிதி உள்ளது. கட்டுமலையின் மேற்பக்கம் தேவகோட்டம் என்று வழங்கப்படும். படிகளைக் கடந்து மேலே சென்றால் நேரே சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. இங்கு மரகதலிங்கம் ஒன்றுண்டு. மரகதவிடங்கர் எனப் பெயர். சேமமாக வைக்கப் பெற்றுள்ளது. சோமாஸ்கந்தர் சந்நிதிக்குப்பக்கத்தில் மூலவர் அருள்மிகு நவநீதேசுவரர் — வெண்ணெய்ப் பெருமானார் சிவலிங்க வடிவத்தில் கோயில்கொண்டுள்ளார். இலிங்க மென்பது காணும் உருவினுக்கும் காணாத அருவினுக்கும் அறிகுறியாய் விளங்குவது. மூலவருக்குப் பக்கத்தில் நடராஜப் பெருமான் ஆடவல்லாரின் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது.

இதற்குப் பக்கத்தில் பல வண்ணச் சலவைக்கற்கள் பதித்த அழகிய கோயிலில் முருகப் பெருமானார் **சிக்கல் சிங்காரவேலவர்** நின்ற திருக்கோலத்தில் வெள்ளி மஞ்சத்தில்

காட்சியளிக்கின்றார். அழகும், இளமையும், கலையும், கருணையும், வேலவர் உருவத்தில் காட்சியளிக்கின்றன. இரு புறமும் வள்ளி தெய்வயானையாகிய இரு மாதர்கள் விளங்குகிறார்கள். கார்த்திகை நாட்களிலும், கந்தர் சஷ்டி விழாவிலும் வேலவரைக் கண்டு தரிசிக்கப் பலர் திரள் திரளாக வருவார்கள். அன்பர்களின் கண்கள் பெருமானை விட்டு அகன்றாலும், வேலவ மூர்த்தி கண்களை விட்டு அகல மாட்டார்.

கட்டுமலையின் கீழ்ப்பக்கத்தில் பள்ளியறை உள்ளது. இதற்குக் கீழ்புறத்தில் **அம்மன்** கோயில் உள்ளது. மூல ஸ்தானத்தில் அருள்மிகு சத்தியாயதாட்சி வேல் நெடுங்கண்ணி அம்மையார் கருணை முகத்துடன் காட்சி தருகின்றார். அம்மன் கோயில் முன் மண்டபத் தூண்களில் இக்கோயில் திருப்பணி செய்த திரு. அழகப்ப செட்டியார் திருவுருவமும் அவர் மனைவியார் திருவுருவமும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

முன் கோபுரத்தை அடுத்துள்ள வடபுறத் திருச் சுற்றில் கிழக்கு நோக்கிய சந்நிதியாகப் பெருமாள் கோயில் உள்ளது. **கோலவாமனப் பெருமாள்** நின்ற திருக்கோலத்தில் சேவை அருளுகிறார். திருமால் வாமனாவதாரம் எடுத்துச் சிவபக்தனான மகாபலியை அழிக்கச் சிவபெருமானிடம் வரம் பெறுவதற்குக் கயா தீர்த்தத்தில் நீராட எழுந்தருளினார் என்றும், இதனால் கயா மாதவர் என்ற பெயர் ஏற்பட்ட தென்றும் புராணம் கூறுகிறது. தாயாருக்குக் கோமளவல்லித் தாயார் என்றும் பெயர் வழங்குகிறது. பெருமாள் சந்நிதியில் சேஷாசனத்தின் மீது வைகுண்டநாதன் வீற்றிருக்கும் வடிவம் யாவரையும் வலிந்தழைக்கும் நிலையில் உள்ளது. வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் கோயில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அருள்மிகு நவநீதப்பெருமான் கோயி லுக்கு மேற்கில் பாற்குளத் தீர்த்தம் உள்ளது. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்களும், வெளியில் மடவிளாகமும்,

தேரோடும் திருவீதியும் உள்ளன. கோயிலுக்குரிய மரங்கள் மல்லிகையும் அரசும் ஆகும். மல்லிகை உட்திருச்சுற்றில் தக்ஷிணாமூர்த்திக்குப் பக்கத்திலும் அரசு பாற்குளக் கீழ்க் கரையிலும் உள்ளன.

திருக்கல்யாண மண்டபம்

முன் கோபுரத்துக்குக் கிழக்கில் உள்ளது. இத்தலத்துக்குத் தனிப் பெருமை தர வல்லது. சுமார் மூவாயிரம் மக்கள் அமரக் கூடியது. மின்சார வசதிகளுடன் கூடியது. "காரனேஷன் ஹால்" எனவும் வழங்கும். 1932ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது. இருபுறங்களிலும் இரும்புத் தூண்கள் அமைத்துக் காண்போருடைய மனங்கவரும் வகையில் கலை அரங்கமாகத் திகழ்வது. கந்தர் சஷ்டி உற்சவ காலங்களிலும் பிற விசேட நாட்களிலும் சமயச் சொற்பொழிவுக் கூடமாகவும் இன்னிசை அரங்கமாகவும் விளங்குகிறது. தென்னாட்டில் எங்குமே கண்டிராத ஒரு சிறப்பு அம்சமாகும்.

இத் திருக்கோயிலின் உபகோயில்களாவன.

1. சிக்கல் கிராமத்தில் தேரடி பக்கம், அருள்மிகு பார்வதீஸ்வரர் திருக்கோயிலும்

2. செல்லூர் கிராமத்தில் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், அய்யனார் கோயில், மாரியம்மன் கோயில் களும்

3. நாகை தாலுக்கா பாலக்காடு கிராமத்தில் அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயிலும்

4. திருவாரூர் தாலுக்கா கோயில்கடம்பனூர் கிராமத்தில் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலும்.

சிவன் ஊர்த்துவ நடனம்

காளி நர்த்தனம்



தங்கும் விடுதி



டீலக்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்

இத்திருக்கோயிலின் ஒரே நிர்வாகமாக இருந்து வருகின்றன. அதன் திருவிழாக்களும் செய்யப்பட்டு வருகிறது. கோயில் கடம்பனூர் அருள்மிகு கைலாசநாதசுவாமி கார்த்திகை ஞாயிறு உற்சவம் ஒவ்வொரு ஞாயிறு அன்று ரிடப வாகனத்தில் காட்சி தந்து தீர்த்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

பிற கோயில்கள்

தேரடியில் இரத்தின விநாயகர் கோயில் உள்ளது. தென்மேற்கு மூலையில் ஓர் ஐயனார் கோயில் இருக்கிறது. **'ஆபத்து காத்த ஐயனார்'** என்பது பெயர். முன்னே ஓர் குளமும், கண்ணைக் கவரும் குதிரையும் உள்ளன. அந்தக் கோயில் கரு. முத்து. அழகப்ப செட்டியார் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டது. மேலவீதி வடகோடியில் செல்ல முத்து மாரியம்மன் கோயிலும், பெரிய கோயில் சந்நிதியில் பிடாரி கோயிலும் இருக்கின்றன. கிராம தேவதைகளின் கோயில்கள் வீதியிலேயே அமைந்திருப்பது தனிப் பெருமையாகும்.

சிற்பமும், ஓவியமும்

கோயிலுக்கு முன்னுள்ள இராஜகோபுரம் எழு நிலை மாடம் அமைந்தது. 80 அடி உயரமுள்ளது. வேலவர் விருத்தராக வள்ளியிடம் காதல் காட்டுதல், சூரனை சம்மாரம் செய்ய அம்மையிடம் வேல் வாங்குதல், சூரனைச் சம்மாரம் செய்தல் முதலிய சிற்பங்கள் புதிய ராஜகோபுரத்தில் சுதை வடிவில் அழகாக அமைக்கப் பெற்றுள்ளன. கார்த்திகை மண்டபம் என்னும் வசந்த மண்டபத்தில் கந்த புராண வரலாறுகள் - கந்தன் திருவிளையாடல்கள் - முருகன் பிறப்பு முதல் கல்யாணம் வரையிலுள்ள வரலாறுகள் ஓவியங்களாக திருச்சுற்றில், பாற்கடலில் பள்ளிகொண்ட

சி — 7

பெருமான் முதல் மாரீச வதம் வரையிலுள்ள இராமாயண வரலாறுகளைத் தெரிவிக்கும் சிற்பங்கள் சுதை வடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் துருவ முனிவர் தவம், கஜேந்திர மோட்சம், பதஞ்சலி, வியாக்கிரபாதர், நடராஜர், முருகப்பெருமான், தியாகராஜர், தட்சணாமூர்த்தி முதலிய சுதையால் ஆக்கப்பெற்ற திருவுருவங்களும் அழகாய் உள்ளன. கல்யாண மண்டபத்தில் பார்வதி கல்யாண ஓவியம் அழகாக வரையப் பெற்றுள்ளது. பெருமான் சந்நிதியில் சேஷாசனத்தில் வைகுண்டநாதன் வீற்றிருக்கும் சிற்பம் அழகுடன் விளங்குகிறது. கோயிலில் பல கல் வெட்டுகள் ஆங்காங்கு உள்ளன. பல சிற்பங்கள் அமைந்த இரண்டு தேர்களும் கல்யாணத் தேரும், வாகனங்களும் இருக்கின்றன.

திருவிழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் நவநீதப் பெருமானுக்குப் பெருவிழா பத்து நாட்கள் வரையில் நடைபெறும். பெருமான் பல வாகனங்களில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பார் இரண்டு தேர்களில் ஒன்றில் தேரோட்டம் நிகழும். ஐப்பசித் திங்களில் சிங்காரவேலவருக்கு 10 நாட்கள் விழா நடைபெறும். வேலவர் தங்கவாகனங்களில் எழுந்தருளிக் காட்சி வழங்குவார். ஐந்தாவது நாளில் தேர் விழா நிகழும். தேர் விழா முடிந்து வேலவர் அம்மை யிடமிருந்து வேல் வாங்கி மலைக்குச் சென்ற பின் வேலவர் மேல் சிலமணி நேரம் வியர்வைத் துளிகள் காணப்படும். இஃது ஓர் அற்புதக் காட்சி: இத்தலத்திலும், திருச்செந்தூரிலும் சூரசம்மார விழாச் சிறப்பாக நடந்து வருகிறது. பின்பு தெய்வானைத் திருமணமும், வள்ளி கல்யாணமும் நடை பெறுகின்றன. விழா நாட்களில் தேவார பாராயணமும், சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை விருந்தும், மேளக் கச்சேரிகளும் நிகழும். இவ்விழாவைக் காண பதினாயிரக் கணக்கான மக்கள் வெகு தூரங்களிலிருந்தும் வருகிறார்கள்.

சிங்காரவேலவரின் திருக்கோலக்காட்சிகளைக் கண்டு தரிசிப்ப துடன் இறையின்பத்தைக் காட்டும் இசை விருந்துகளையும், ஆன்ற புலவர்களின் பேச்சின்பத்தையும், தேவாரம் முதலிய திருமுறைப்பாடல்களையும் கேட்டு இன்புற்றுச் செல்கிறார்கள்

அருள்மிகு நவநீதேசுரப் பெருமானுக்கும் பிறமூர்த்தி கட்கும் நாடோறும் ஆறு கால பூசனை நடத்தப் பெறுகிறது.

அருள்மிகு நவநீதப்பெருமானுக்கும், பிற மூர்த்திகளுக்கும் திங்கள் தோறும் விசேட பூசைகளும், விழாக்களும் நடை பெறும். சிவராத்திரி முதலிய நாட்களிலும், பிற விசேட காலங் களிலும் மகாபிஷேகம் நடைபெறும். திங்கள் தோறும் வரும் கார்த்திகை நாட்களில் சிங்காரவேலவருக்கு மகாபிஷேகம் நடைபெறும். பால், இளநீர், பன்னீர் முதலிய அபிஷேகத் திரவியங்களை அன்பர்கள் அணி அணியாக வந்து காணிக் கையாக வழங்குவார்கள். அன்றைக்கு வேலவர் எழுந்தருளி உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

முருகனுக்குரிய முகங்கள் ஆறு. எழுந்தருளிய இடங்கள்- படை வீடுகள்- திருப்பரங்குன்றம் முதலிய தலங்கள் ஆறு. பால் கொடுத்துக் காப்பாற்றிய பெண்கள்- கார்த்திகைப் பெண்கள்-அறுமீன் ஆறு. முருகனுக்குரிய மந்திர எழுத்துக்கள் ஆறு. சூரனைச் சம்மாரஞ் செய்த நாள்- (சஷ்டி) ஆறாவது. இத்தகைய பெருமைகளையுடைய முருகனை - சிங்கார வேலவரைச் சிறப்பு நாட்களாகிய கார்த்திகை நட்சத்திரங் களிலும் கந்தர் சஷ்டி நாட்களிலும் விரதமிருந்து வழிபட்டு முருகன் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிக்கல் பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் கடல் நாகைக் காரோணத்தை வணங்கி நீங்கிப் பரவிய பதிகள் பல. அவற்றுள் திருச்சிக்கல், திருக்கீழ்வேளூர் முதலியனவும் ஆம். அவற்றைப் பணிந்து பாடிய திருப்பதிகங்களுள் 'வானுலாவுமதி' என்னும் இதுவும் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது திருமுறை. **பண்: இந்தளம்.**

1. வானு லாவுமதி வந்துல வும்மதின் மாளிகை
தேனு லாவுமலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித்திட்டவெண் ணெய்ப்பெருமானடி
ஞான மாகநினை வார்வினை யாயின நையுமே.

(வான் உலாவும் மதி - தன்மேல் வந்துலாவும் அளவு உயரிய மாளிகை 'வண்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்' என்றார் கம்பர். வேனல்-சினம். வேள்-மன்மதன். விழித்திட்ட-நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்து, எரித்தவன் வெண்ணெய்ப் பெருமான் என்ற நயம் உணர்க, ஞானமாக நினைவார். "பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம் பரனைப்பதி ஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாதநிழற்கீழ் நீங்காதே" (சித்தியார் 292) நினைந்து நிற்பவர். நையும் - நைந்தொழியும்.

2. மடங்கொள் வாளைகுதி கொள்ளு மணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண் மாமறை யோரவர் மல்கிய சிக்கலுள்
விடங் கொள் கண்டத்து வெண் ணெய்ப் பெருமானடி மேவியே
அடைந்து வாழுமடி யாரவ ரல்ல லறுப்பரே.

(மடம்-மடப்பம். குதி-குதித்தல். முதனிலைத் தொழிற் பெயர். பொய்கை-இயற்கை நீர்நிலை. திடம்-சிவபெருமானே மெய்ப் பொருட் கடவுள் என்னும் வேதாகம பாத்துவ நிச்சயம். மல்கிய - நிறைந்த மேவி - விரும்பி, அல்லல் அறுத்தல் - பிறவித் துன்பந் தீர்த்தல்)

3. நீலநெய்தல்நில விம்மல ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வள மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னாளையொர் பாகன்வெண் ணெய்ப் பிரான்
பாலவண் ணன்கழ லேத்தநம் பாவம்ப றையுமே.

(நெய்தல்-நெய்தல் மலர், நிலவி-விளங்கி, ஆலும் - அசையும், துள்ளும். மாலும் என்று கொண்டு மயங்கு மெனலுமாம். வேல் - வேல் போன்ற, வேலொண் கண்ணி யினாள் என்றது புதியது. வேல் நெடுங்கண்ணி என்னும் அத் தலத்தின் திருநாமத்தைக் குறித்தது. இவ்வாறு பல திருப்பதிகங்களுட் காணலாம். பிற்காலத்தில் வடமொழிப் பெயராக மாறிய காரணத்தால் சிற்சில பதிகங்களுள் அம்முறை விளங்கவில்லை. பாலவண்ணன் - பால் போலும் வெண்ணிறத்தன், பாலனாந் தன்மையனுமாம். பறையும் - நீங்கும்)

4. கந்தமுந் தக்கைதை பூத்துக்க மழ்த்துசே ரும்பொழிற்
செந்துவண் டின்னிசை பாடன்மல் குந்திகழ் சிக்கலுள்
வெந்தவெண் ணீற்றண்ணல் வெண்ணெய்ப் பிரான்விரை யார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே.

(கந்தம்-மணம், முந்த-முற்பட்டுச் சென்று வீசிப் பரவ, கைதை-தாழை, கமழ்ந்து-மணந்து, செந்து-ஒரு பெரும் பண், இசை ஐந்து என்பது சந்து என்றாகிச் செந்து என்று மருவிற்று எனலுமாம். ஜயம்-சயம் செயம். கஜம் - (கஜம்) கெசம் என்பன போலப் பலவுள. வெந்த வெண்ணீறு-விதிப் படி கற்பஞ் செய்யப்பெற்ற திருவெண்பொடி. திண்ணம் - உறுதி.)

5. மங்குல்தங் கும்மறை யோர்கண்மா டத்தய லேமிகு
தெங்குதுங் கப்பொழிற் செல்வமல் குந்திகழ் சிக்கலுள்
வெய்கண்வெள் ளேறுடை வெண்ணெய்ப்பிரானடி மேவவே
தங்கு மேற்சர தந்திரு நாளுந்த கையுமே.

(மங்குல-மேகம். தங்கும் மாடம் என்று சேர்க்க மறை யோர்களது மாடம் என்க. தெங்கு தென்னை என்பதால் அதன் தொல்லுரு விளங்கும். துங்கம்-உயர்ச்சி, ஏறு-விடை மேல்-மேலான கதி, சரதம் - உண்மை, திரு - இலக்குமி, தகையும் - பொருந்தும், அழகு பெற்றிருக்கும் வீற்றிருக்கும். 'பூவீற்றிருந்த திருமாமகள்' மேன்மை புதியது மேற்கதி என்றிருந்ததோ?)

6. வண்டிரைத் தும்மது விம்மிய மாமலர்ப் பொய்கைசூழ்
தெண்டிரைக் கொள்புனல் வந்தொழு கும்வயற் சிக்கலுள்
விண்டிரைத் தம்மலராற்றிகழ் வெண்ணெய்ப் பிரானடி
கண்டிரைத் தும்மன மேமதி யாய்கதி யாகவே.

(இரைத்து-ஒலித்து, விம்மிய-மிக்குச் சொரிந்த, மாமலர்-தாமரைப் பூ. திரை - அலை. விண்டு இரைத்த மலர் - திருமால் அருச்சனை செய்த (பத்திர) புட்பங்கள். இரைத்து-துதி செய்து மதியாய் தியானிப்பாய். கதி-சிவகதி. ஆக - எய்தலாக. ஆக மதியாய் என்க)

7. முன்னுமா டம்மதின் மூன்றுட னேயெரி யாய்விழத்
துன்னுவார் வெங்கணை யொன்றுசெ லுத்திய சோதியான்
செங்நெலா கும்வயற் சிக்கல்வெண் ணெய்ப்பெருமானடி
உன்னிநீ டம்மன் மேவினை யாய்வினை யோயவே.

(துன்னுகணை, வார்கணை, வெங்கணை என்க. உன்னி நீட தியானித்து அழியாது வாழ. ஒய்தல்-தேய்ந்தொழிதல்.)

8. தெற்ற லாகிய தென்னிலங் கைக்கிறை ளன்கலை
பற்றி னான்முடி பத்தொடு தோள்கள்நெ ரியவே
செற்ற தேவனஞ் சிக்கல்வெண் ணெய்ப்பெருமானடி
உற்று நீநினை யாய்வினை யாயினவோயவே.

(தெற்றல்-அறிவில் தெள்ளியவன் 'நடைகற்ற தெற்ற மாறுபாடுடையவன் என்பது இக்காலத்தார் கூறிய புதுப் பொருள். அதற்கு ஆதாரமில்லை. இராவணன் ஒழுக்கத்திற் பிழைத்தவனே யாயினும் அறிவிற் சிறந்தவன் செற்ற (வலியை) அழித்த.)

9. மாலி னோடரு மாமறை வல்லமு னிவனும்
கோலி னார்குறு கச்சிவன் சேவடி கோலியும்
சீலந் தாமறி யார்திகழ் சிக்கல்வெ ண்ணெய்ப்பிரான்
பாலும் பண்மலர் தூவப்ப றையும்நம் பாவமே.

(மால்-திருமால். முனிவன்-பிரம்மன். சிவன் சேவடி குறுகக் கோலினார் - கோலியும் அறியார் என்க. கோலுதல் - வழிவகுத்தல், அடி முடி தேடமாறி முயலுதல் இங்குக் கோலுதலாம். சீலம்-பரமசிவன் மெய்த்தன்மை. பால் பக்கம் பசும்பாலும் மலரும் என்று உம்மை கூட்டிப் பாலும் மலரும் என்க. பாலபிடேகம் புரிய பறையும் - நீங்கும்.)

10. பட்டை நற்றுவ ராடையி னாரொடும் பாங்கிலாக்
கட்ட மண்களுக் கள்சொல் வினைக்கரு தாதுநீர்
சிட்டன் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மான்செழு மாமறைப்
பட்டன் சேவடி யேபணி மின்பிணி போகவே.

(பட்டை நற்றுவராடையினார் - சாக்கியர், துவர்செந் நிறம், காவியேறியது பட்டை என்பது துவர்ப்பட்டை நிறம் துணிக்கு ஊட்டும் வழக்கை நினைவூட்டும் பாங்கிலா - மைமுறையற்ற பண்பு. கட்டு - உடற்கட்டு. கழுக்கள் - கழுவேறுதற் குற்ற அபசாரம் செய்தவர்கள். அமண் - சமண், க்ஷமன் என்பதன் திரிபு. சிட்டன் வேதாகமம் வல்ல பெருமான் 'சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலம்' பட்டன் - புலவன் - தன்னைத்தானே அருச்சித்தானாதலின் அருச்சகன் எனினும் பொருந்தும் 'ஆலதிழற் பட்டன்' (திருப்பல்லாண்டு) என்ற தால் ஆசாரியனுமாம். ஏகாரம் - பிரிநிலை, பிணி - பிறவிப் பெரும் பிணி முதலிய பலவுமாம்.

11\. கந்த மார்பொழிற் காழியுண் ஞானசம் பந்தநல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடிச்
சந்த மாச்சென்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீற்றணி யும்பெரு மானடி மேவரே.

(சத்தம் - இசை. செந்தமிழ் - இத்திருப் பதிகத்தை உணர்த்திற்று. வான் - பேரின்ப வீட்டுலகு. தேவாரத்தில் 'வான்' என்று வருமிடங்களிற் பெரும்பாலுமிப் பொருளே கொள்ளல் வேண்டும். 'வானிடை அடிமேவர்' என்றதால் துறக்கம் ஈண்டுப் பொருந்தாமை அறிக. 'கேடிலா வானுலகம்' 'வானசம் பந்தத்வரொடும் மன்னி வாழ்வாரே' என்ற திருமுறை வசனங்களை நோக்குக.)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்

கச்சையூர் காவங் கழுக்குன்றம் காரோணம்
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சியூர் கச்சி சிக்கல் நெய்த்தானம் மிழலை
இச்சையூ ரெய்தமான் இடையா றிடைமருதே.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பல தலங்களுக்கும் சென்று, சிக்கலுக்கும் போந்து அருள்மிகு சிங்கார வேலவரைக் கண்டு, தொழுது, மனமுருகித் தோத்திரம் செய்தருளிய

(1) திருப்புகழ்

புலவரை ரட்சிக் குந்தாரு வேமது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய திக்கெட் டும்போயு லாவிய புகழாளா

பொருவரு நட்புப் பண்பான வாய்மையி
லுலகிலு னக்கொப் புண்டோவெ னாநல
பொருள்கள்நி றைத்துச் செம்பாக மாகிய கவிபாடி

விலையில்த மிழ்ச்சொற் குன்போலு தாரிக
ளெவரென மெத்தக் கொண்டாடி வாழ்வெனும்
வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர

மிகவறு மைப்பட டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையும் அருள்வாயே

இலக்கிய வெட்சிச் செந்தாம மார்புய
சிலைநுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே

இளையகொ டிச்சிக் கும்பாக சாதன
னுதவுமொ ருத்திக் குஞ்சீல நாயக
எழிலியெ ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே

அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி இசையாலே
அழகிய **சிக்கற் சிங்கார வேலவ**
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே.

(2)

கன்னலொத்த மொழிச்சொல் வேசியர்
வன்மனத்தை யுருக்கு லீலையர்
கண்வெருட்டி விழித்த பார்வையர் இதமாகக்
கையிலுற்ற பொருட்கள் யாவையும்
வையெனக்கை விரிக்கும் வீணியர்
கைகள்பற்றி யிழுத்து மார்முலை தனில்வீழப்

பின்ளிவிட்ட சடைக்கு ளேமலர்
தன்னைவைத்து முடிப்பன் நீயவி
ழென்னுமற்ப குணத்த ராசையில் உழலாமல்
பெய்யுமுத்த மிழிற்ற யாபர
என்ன முத்தர் துதிக்கவே மகிழ்
பிஞ்ஞகர்க்கு ரைசெப்பு நாயக அருள்தாராய்

வள்ளியொத்த படைக்க லாதிய
துன்னுகைக்கொ ளரக்கர் மாமுடி
மண்ணிலற்று விழச்செய் மாதவன் மருகோனே
மன்னுபைப்ப ணியுற்ற நீள்விட
மென்னவிட்டு முடுக்கு சூரனை
மல்லுடற்று முருட்டு மார்பற அடைவாகச்

சென்னியற்றி யறுத்த கூரிய
மின்னிழைத்த திறத்த வேலவ
செய்யபொற்பு னவெற்பு மானணை மணிமார்பா

செம்மனத்தர் மிகுந்த மாதவர்
நன்மைபெற்ற உளத்தி லேமலர்
செல்வசிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே.

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர் இயற்றியருளிய
க்ஷேத்திரக் கோவை பிள்ளைத்தமிழ்.

முக்கட் புராரியொடு சக்கிராயுதக் கடவுள்
முண்டகத்தவி சிருந்தோன்
மூவரும் சிரகரகம் பிதஞ்செய்து
நம்முருகன் பராக்கிரமமெனச்

சக்கரவாளத்துடன் மிக்க நவகண்டமும்
தருமட்ட குலகிரிகளும்
சத்தசாகரமும் கணத்திற் சுற்றிவரு
தாருகன் வாயின்உதிரங்

கக்கிப் படைத்துக்கிடந்தே யிருக்கக்
கடைக்கண் சிவந்தவேலன்
கற்பகாட விதடவு மண்டகோபுரங்
கனகமதின் நின்றிலங்கும்

சிக்கலம் பதிமேவு சிங்காரவேலனாம்
தேவர்நாயகன் வருகவே
திகழும் வெண்ணெய்ப்பிரான்
ஒருபாலுறைந்த மெய்ச்செல்வியாலகன் வருகவே.

சிக்கல் தவிர்க்கும் சிங்காரவேலவன்

சிக்கல் யாவும் தவிர்ப்பான் – என்னப்பன்
சிக்கலில் அமர்ந்திட்ட சிங்காரவேலவன் (சிக்கல்)

பக்கத் துணைநிற்பான் பாவங்கள் தீர்ப்பான்
பக்தர் மனத்திலென்றும் பரவி நிறைந்திருப்பான் (சிக்கல்)

வேண்டும் வரமனைத்தும் விருப்பமுட னளிப்பான்
வேல்எழில் மயிலொடு விளங்கிட அருள்சுரப்பான்
ஆண்டுகொண் டெந்நாளும் அன்பர்களைக் காப்பான்
அல்லல்வரும் போதெல்லாம் அபயகரம் அளிப்பான்.

— கவிஞர் மா. வரதராசன்.

கண்கவர் கலை அழகு நிறைந்த இக் கோயிலின் சில சிறப்பு அம்சங்கள்

1. முருகனின் பெருமை நிறைந்த சிவன் கோயில்; ஆனால் அருகில் பெருமாளும் கோயில் கொண்டிருப்பது.

2. கி. பி. ஏழாவது நூற்றாண்டின் மத்தியில் அருள்மிகு நவநீதேசுவரரைப் பற்றி திருஞானசம்மந்தர் பதிகம் பாடியுள்ளார். அருள்மிகு சிங்காரவேலவரைப் பற்றி திரு. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார்.

3. கல்யாண மண்டபம்:- கோயிலுக்கு முன் அமைந்துள்ள இம் மண்டபம் ஒரு சிறந்த அணியாகும். எங்குமே காணமுடியாத மிகப் பெரிய அலங்காரமான ஹாலாகும். நீளம் 300 அடி; அகலம் 60 அடி ஆகும். 4000 மக்களுக்கு மேல் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் மிகப்பிரம்மாண்டமான தொன்று. 1932-ல் கட்டப்பெற்றது.

4. கார்த்திகை மண்டபம்:- பார்ப்பதற்கு ரம்யமான கந்தபுராண எழிலோவியங்கள் நிறைந்த இடம். கார்த்திகை தோறும் திரு சிங்காரவேலவருக்கு இங்கு அபிஷேகம் நடைபெறும்.

5. இராஜகோபுரம்:- இது 1933-ல் கட்டப்பெற்றது. 70 அடி உயரத்தில் 7 மாடங்களுடன் கூடிய சிறந்த கலைச் சிற்பங்கள் நிறைந்ததாகும்.

6. தங்க வாகனங்கள் :- தமிழ் நாட்டில் மிக அபூர்வ மாகவே காணும் சிறந்த வேலைப்பாடுடன் கூடிய விலை மிக்க தங்க வாகனங்கள் இருக்கின்றன. ஆட்டுக்கிடா, மயில், குதிரை, மஞ்சம், தங்கக் கவசம் முதலியன.

7. திரு சிங்காரவேலவர் நூல் நிலையம் :- சிறிதாக கார்த்திகை மண்டபத்தில் இருந்ததைப் பரந்த அளவில் சுமார் 860 புத்தகங்களும், பல தினசரி, மாத வார இதழ்களும் நிறைந்த அருள்மிகு சிங்காரவேலவர் நூல் நிலையம் எனப் பெயர் கொண்டதாக 30—3—58-ல் திறந்து வைக்கப் பெற்று நடைபெற்று வருகிறது. அதற்கென ஒரு நூலகர் (லைப்ரேரியன்) இருக்கிறார்.

8. குடிதண்ணீர் :- இப்பகுதி மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் இக்கோயிலின் வற்றாத கிணற்றிலிருந்தே கிடைக்கிறது. கோயிலின் முன்புறம், தெற்கு மடவிளாகம் ஆகிய இரு இடங்களில் குழாய்கள் வைத்து பொதுமக்கள் உபயோகத்திற்கு காலை மாலை இரு வேளைகளிலும் விநியோகிக்கப்படுகிறது.

9. நந்தவனம் :- கோயிலின் தென்பகுதி வெளிப் பிரகாரத்தில் சிறிய அளவில் பலவிதமான புஷ்பச் செடிகள் நிறைந்த நந்தவனம் இருக்கிறது.

10. இறை வழிபடுவோர் விடுதி (Pilgrim Shed) :- வழிபடுவோர் தங்குவதற்கென மிகக் குறைந்த கட்டணத்தில் சகல வசதிகளும் உள்ள அறைகள் உள்ளன.

11. வழிபடுவோர், சாமான் சேமிப்பு அறை (Cloak Room) – உருப்படி 1-க்கு 10 பைசா வீதம் வசூலித்து சாமான்களை பந்தோபஸ்துடன் வைத்திருக்க வசதியுண்டு.

12. நிருவாகம் :- இத் திருக்கோயிலுக்குச் சொந்தமாக 929 ஏக்கர் நன்செய் நிலமும் 175 ஏக்கர் புன்செய் நிலமும்

உள்ளது. காணிக்கைகளும் வரப்பெறுகின்றன. இது தமிழ் நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் ஆளுகைக்குட்பட்ட முதனிலைத் திருக்கோயிலாகும்.

13. இவ்வாலயத்தில் ஒருகால அறக்கட்டளைக்கு ரூ. 250/-ம், ஆறு கால பூசை செய்வதற்கு ரூ. 1500/-ம் டெபாசிட் செய்தால் இதிலிருந்து வரும் ஒரு வருட வட்டித் தொகையைக் கொண்டு அவரவர்கள் விரும்பும் நாளில் அன்றைய கால பூசை செய்யப்பட்டு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

வளர்க சிவநெறி!



அருள்மிகு நவநீதேச்சுரர் (வெண்ணெய்நாதர்)



தங்கக் குதிரை வாகனம்

தங்க மயில் வாகனம்



திருக்கல்யாண மண்டபம்

அன்பு பிரிண்டிங் பிரஸ், சுவாமிமலை.